Registered at the G. P. O. as a Newspaper ★★ விலை சதம் 15

# ஈழநாடு

தேசிய தினசரி National Tamil Daily

ஏர் 7 விசுவாவசு சித்திரை 13 துல்ஹஜ் பிறை 22 (25-4-65) ஞாயிற்றுக்கிழமை இதழ் 7

USE




CTS. -/20 PER. CAKE

MILK WHITE

BLUE SOAP

# சிறுபான்மையினர் பிரச்னைக்குத் தீர்வு

## மந்திரிசபை கூட்டம் ஆராயும்

— ரோ. பாலசுந்தரம் —

கொழும்பு, சனி

**சிறுபான்மையினரை எதிர்நோக்கும் பல பிரச்னைகள் சம்பந்தமாக ஆராய விசேஷ மந்திரிசபைக் கூட்டமொன்றைக் கூட்ட பிரதமர் டட்லி சேனநாயக்கா ஏற்பாடுகள் செய்துவருகின்ருர்.**

மொழி சம்பந்தமாகவும் நிர்வாகம் சம்பந்தமாகவும் தமிழ் பேசும் மக்களை எதிர்நோக்கும் பிரச்னைகளுக்குதீர்வு கண்டுஅவற்றை நிவர்த்திக்கவேண்டிய வகையில் மசோதாக்களைப் பார்லிமெண்டுக்குக் கொண்டுவருவதே இந்த மந்திரிசபைக் கூட்டத்தின் நோக்கமாக இருக்கும்.

இதுதவிர அரசாங்க நிர்வாக இலாகாக்களிலும், அரசாங்க கூட்டுஸ்தாபனங்களிலும் நடைமுறையிலிருந்து வந்த சிறுபான்மையினரைப் பாதிக்கக் கூடிய பல முக்கிய பிரச்னைகளுக்கும் தீர்வுகாணப்பட இருக்கிறது.

சுற்றறிக்கைகள் மூலம் தற்பொழுது இருந்துவரும் நிர்வாகச் சீர்கேடுகளை நிவர்த்திசெய்ய ஏற்பாடுகள் செய்யப்பட்டுவருவதாகத்தெரியவருகிறது.

## யாழ்ப்பாணத்தில் ஸ்தலஸ்தாபனமந்திரி

யாழ்ப்பாணம், ஞாயிறு

ஸ்தலஸ்தாபன மந்திரி திரு. எம். திருச்செல்வம் நேற்று பகல் "யாழ்தேவி"யில் யாழ்ப்பாணம் வந்து சேர்ந்தார். அவர் இங்கு பல கூட்டங்களிலும் நிகழ்ச்சிகளிலும் கலந்துகொள்வார்.

## தேவிபுரத்தில் நிவாரண வேலைகள் ஆரம்பம்

### விரிவான நடவடிக்கைகளை மேற்கொள்ள உயர்தர மகாநாடு

வவனியா. சனி

அண்மையில் ஏற்பட்ட சூருவளியினுல், வவனியா மாவட்டத்தில் பாதிக்கப்பட்ட பகுதிகளிலுள்ள மக்களின் கஷ்டத்தைத் தீர்க்க எப்படியான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட வேண்டும் என்பதை ஆராய்ந்தறியும் பொருட்டு வவனியா அரசாங்க அதிபர் உயர்தர மகாநாடொன்றை விரைவில் கூட்டவிருக்கின்ருர்.

வவனியா மாவட்டத்தில் அதிகமாகப் பாதிக்கப்பட்ட முல்லைத்தீவுப் பகுதியிலுள்ள தேவிபுரத்துக்கு வவனியா அரசாங்க அதிபர் நேரில் விஜயம் செய்து அங்குள்ள மக்களின் கஷ்டத்தை கேட்டறிந்தார். அரசாங்க அதிபருடன் சமுகசேவைப் பகுதி உத்தியோகஸ்தர்களும் சென்றிருந்தனர். இப்பகுதி மக்களின் கஷ்டத்தைத் தீர்க்கும்முகமாக தேவிபுர குடியேற்றத்திட்ட உத்தியோகத்தர் தலைமையில் நேற்று நிவாரணவேலைகள் ஆரம்பித்துவைக்கப்பட்டன. மக்கள் இங்கு உற்சாகத்துடன் வேலை செய்துவருவது குறிப்பிடத்தக்கது இந்த வேலைகளை வவனியா சமுகசேவைப் பகுதி உத்தியோகஸ்தர்கள் மேற்பார்வையிட்டு வருகின்றனர்.

முல்லைத்தீவு காரியாதிகாரியின் தீவிரமுயற்சிகளைத் தொடர்ந்து இந்த நிவாரண வேலைத்திட்டம் ஆரம்பமாகியுள்ளது. முல்லைத்தீவுப்பகுதியிலுள்ள கொக்குளாய், அலம்பல், புதுக்குடியிருப்பு ஆகிய இடங்களிலும் இப்படியான நிவாரண வேலைகள் ஆரம்பிக்கப் படவேண்டுமென்று வவனியா அரசாங்க அதிபரை காரியாதிகாரி கேட்டுள்ளார். இதனை, சமுகசேவைப்பகுதி உத்தியோகஸ்தர்களின் பரிசீலனைக்கு அரசாங்க அதிபர் விட்டுள்ளார்.

## பிரதமருக்குவாழ்த்து

கொழும்பு, சனி

பிரதமர் டட்லி சேனநாயக்காவுக்கு சீனப் பிரதமர் திரு.சூ என்-லாய்வாழ்த்துச் செய்தியொன்றை அனுப்பி வைத்துள்ளார்.

## மே தினம்

ஹட்டன், சனி

இலங்கைத் தொழிலாளர் கழகத்திஞல் ஒழுங்கு செய்யப்பட்டுள்ள மே தினக்கூட்டம், ஹட்டன் டன்பார் மைதானத்தில்நடைபெறும் கூட்டத்துக்கு திரு. அ. அமிர்தலிங்கம் தலைமை வகிப்பார்.

## நாகநாதன் லண்டன் செல்வார்

கொழும்பு, சனி

நல்லூர்த் தொகுதி பாராளுமன்ற உறுப்பினர் டாக்டர் ஈ, எம், வி. நாகநாதன் மே மாத நடுப்பகுதியில் வைத்திய சிகிச்சைக்காக லண்டன் செல்லவிருக்கிருர்.

குடலுடன் சம்பந்தப்பட்ட சத்திரசிகிச்சைக்காகவே இவர் லண்டன்செல்கிருர். ஏற்கனவே இருதய நோய் இருந்தமையால் இங்கு சத்திரசிகிச்சை செய்வதிலும் பார்க்க லண்டனுக்குச் செல்வது நல்லதென டாக்டர்கள் ஆலோசனை கூறியிருப்பதைத் தொடர்ந்துதான் டாக்டர் நாகநாதன் லண்டன் செல்ல திர்மானித்ததாகத் தெரியவருகிறது.

## பேட்டி கண்டனர்

யாழ்ப்பாணம், சனி

யாழ்ப்பாணம் கூட்டுறவுத் துறைமுகச் சேவை சமாசத்தின் நிர்வாசிகள் நேற்றைய தினம் கூட்டுறவு ஆணையாளரைப் பேட்டி கண்டு தமது கஷ்டங்களையும் தொல்லைகளையும் எடுத்துக் கூறினர்.

ஒரு தினத்தில் மட்டும் 1100 [illegible] செய்யப்பட்டிருக்குமென நிர்வாகிகள் மூலம்

அறிந்த ஆணையாளர் அவர்களது சேவையைப் பாராட்டியும், தொழிலாளர்களது கஷ்டங்கள் தீருவதற்கான நடவடிக்கையை எடுட்தாகவும் தெரிவித்தார்.

## ஸ்ரீமாவை டட்லி அழைப்பாரா?

### மொழிப்பிரச்னையில் புதிய திருப்பம்

கொழும்பு, சனி

சிறுபான்மையினர்களுடைய பிரச்னைகளைத் தீர்த்து வைப்பதற்கு தான் எடுக்கவிருக்கும் நடவடிக்கைளுக்கு ஒத்துழைப்புத் தரும்படி முன்னுள்பிரதமரும் தற்போதைய எதிர்க்கட்சித்தலைவருமான திருமதி ஸ்ரீமாவோ பண்டாரநாக்காவை தேசிய அரசாங்கப் பிரதமர் திரு. டட்லி சேனநாயக்கா கேட்டுக்கொள்ள விருப்பதாக அறியப்படுகிறது.

இந்தியர் பிரச்னையைத் தீர்க்க இந்தியப் பிரதமர் திரு, சாஸ்திரியுடன் திருமதி பண்டாரநாயக்கா நடத்திய பேச்சுவார்த்தைகளில் தாம் ஒத்துழைப்புக்கொடுத்ததுபோல தேசிய முக்கியத்துவம் நிறைந்த சிறுபான்மையினர் பிரச்னையைத் தீர்க்க எடுக்கும் நடவடிக்கைகளில் ஒத்துழைப்புக் கிடைக்குமென பிரதமர் எதிர்பார்ப்பதாகவும் கூறப்படுகிறது.

அரசியல் முக்கியத்துவம் நிறைந்த உள்நாட்டுப்பிரச்னையாகவிருப்பதால் இப்பிரச்னையை அரசியல் போராட்டங்களுக்கு உபயோகிக்கும் நோக்கத்துடன் எதிர்கட்சித் தலைவர் ஒத்துழைப்புக்கொடுக்காமல் விட்டுவிடலாமென சில அரசியல் வட்டாரங்கள் கருதுகின்றன.

எதிர்க்கட்சி அங்கத்தவர்களான மூதூர் இரண்டாவது எம். பி, திரு. ஜனுப் மஜீத், கட்டு கம்பளை எம். பி. திரு. டி. பி. சுபசிங்கா ஆகியவர்கள் சிறுபான்மையினர்களுடைய பிரச்னைகளை தீர்க்க அரசாங்கம் எடுக்கும் நடவடிக்கைகளுக்கு ஒத்துழைப்புக்கொடுப்பதென சிம்மாசனப்பிரசங்க விவாதத்தில் தெரிவித்திருக்கிருர்கள். இவர்கள் இருவரும் சுதந்திரக்கட்சி எம். பி.க்கள் என்பது குறிப்பிடத்தக்கது,

சமசமாஜக்கட்சியின் சார்பில் பேசிய கொழும்பு தெற்கு அங்கத்தவர் திரு. பெர்ணுட் சொய்ஸாவும் சிறுபான்மையினர் பிரச்னை தீர்த்துவைக்கவேண்டுமெனவும் அதற்கு தமது கட்சி ஒத்துழைப்புத் தரும் எனவும் தெரிவித்திருந்தார்,

வலப்பனை எம். பி. திரு. ஹெரத் பௌத்த சிங்கள அரசாங்கம் ஒன்றை அமைப்பது தான் தமது கட்சியின் லட்சியம் எனப்பேசி தமிழ்பேசும் மக்களை ஒகிதுக்வைத்ததை எதிர்க்கட்சியினர் அநேகர் ஆட்சேபித் திருப்பதாகவும் தெரிகிறது. இவருடைய பேச்சுத்தான் மூதூர் மஜீத்தை பகிரங்கமாகப் பேச வைத்ததெனவும் பாராளுமன்ற வட்டாரங்கள் கூறுகின்றன.

## வெளிவிவகார அமைச்சின்கட்டுப்பாடு

பம்பல[illegible] சனி

அவசியம் [illegible]
மருந்து வ[illegible]
வெளிநாட்[illegible]
வைக்கப்[illegible]
திக்கப்[illegible]
பொ[illegible]
றை[illegible]
கள்[illegible]

பாத்திரங்கள் வாங்கும் பொழுது

டொலர் மார்க் என்றே கேளுங்கள்

பாவனைக்குச் சிறந்தது

டொலர் மார்க்

அலுமினியப் பாத்திரங்கள்




டொலர் கோர்ப்பரேஷன்

14-டாம் வீதி கொழும்பு

உற்பத்தியாளர்கள்:

அலுமினிய தொழிற்சாலை

மாவிட்டபுரம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுகதை (8ம் பக்கத் தொடர்ச்சி)

வேண்டும்போலிருந்தது கருணாவுக்கு. உடலை நன்கு கவனித்துக்கொள்ளும்படி கடிதம் எழுதினாள். கண்ணம்மா நலமடையவேண்டுமென்று இறைவனை வேண்டிக்கொண்டாள்.

கண்ணம்மாவின் கடிதத்தைஎதிர்பார்த்துஏங்கிக்கொண்டிருந்தாள் கருணா. சென்றுபார்க்க முடியாத நிலையிலிருந்த அவளுக்குக் கடிதம் வராதது பெரும் துயரை அளித்தது. என்னவோ எதுவோவென்றேங்கினாள். இறுதியிற்கடிதம் வந்தது.

கார் முகிலைக் கண்ட மயிலென அவள் உள்ளம் துள்ளிக்குதித்தது. கடிதத்தைப் பிரித்தவள் கையெழுத்து வேருகவிருப்பதைக் கண்டாள். அவசர அவசரமாகக் கடிதத்தைப் படித்தாள். ''அன்பின் கருணா'' என்று கடிதம் தொடங்கியது. ''நான் மானிப்பாய் ஆஸ்பத்திரியிலிருக்கிறேன். என்னைக்கடுமையான விஷசுரம் பீடித்திருக்கிறது. என்னால் எதுவுமே செய்ய இயலவில்லை." இதை வாசித்ததும் கருணாவுக்கே விஷசுரம் வந்துவிட்டதுபோலிருந்தது. ''என் தங்கையைக் கொண்டே இக்கடிதத்தை எழுதுவிக்கிறேன். என் இறுதிநாள் என்னை நோக்கி நெருங்கிவருகிறது," "ஐயோ கண்ணம்மா! ஏனிப்படி எழுதுகிருய்?" - கருணா கதறிவிட்டாள். அவளது கரங்கள் பதறின. மேலே கடிதத்தைப்படித்தாள். ''இப்படி எழுதியதற்காக அழாதே கருணா. பிறந்தவர்யாவரும் இறப்பதுறுதி.' எங்கோ இருந்துகொண்டு தன் இறப்பிற்காக வருந்தப்போகும் தோழிக்குத் தானே ஆறுதல் கூறினாள் அவள். ''மரணத் தறுவாயிலிருக்கும் எனக்கு ஒரே ஒரு ஆசைதானிருக்கிறது. என் உள்ளம் ஒருமுறை உன்னைக் காணத்துடிக்கின்றது." "கண்ணம்மா! என் உள்ளம் உன்னைக் காண்பதற்காக என்னைவிட்டே பிரிந்து சென்றுவிட்டதடி' என்று கத்தினாள் கருணா. கடிதம் தொடர்ந்து கூறியது. ''கடைசிமுறையாக உன்னை நான் காணத் துடிக்கின்றேன். மரணத்தின் வாயிலில் நின்றுகொண்டு உன்னைத்திரும்பிப் பார்க்கத் தவிக்கின்றேன். எனது இறுதி ஆசை இதுதான் கருணா. எனது இறுதி ஆசையை நிறைவேற்ற மறுத்துவிடாதே கருணா. இறுதியாக ஒரே ஒரு முறை. நீ என்னுடன் பேசக்கூட வேண்டாம். உன்னை ஒருமுறை பார்த்தால்போதும்." இதை உன்பெற்றோரிடம் கூறி எப்படியாவது அனுமதி வாங்கிவா." அதற்கு மேல் கருணாவால் படிக்க முடியவில்லை. அவள் இதயத் துடிப்பு நின்றுவிடும்போலிருந்தது. ''கண்ணம்மா! உன்னைக்காண எனக்கு மட்டும் ஆசையில்லையா? நீ நோயுற்று இறக்கும் தறுவாயிலிருக்கிருய். நான் உன்னைக்காணுததால் இறக்கும் தறுவயிலிருக்கின்றேனடி" என்று விம்மிவிம்மியழுதாள் கருணா.

''அம்மா, அம்மா" என்றழைத்தபடி கருணா தாயிடம் சென்றாள். மகளின் கண்கள் கலங்கியிருப்பதைக் கண்ட அன்னை ''என்ன கருணா, என்ன" என்று அன்புடன் அவசரமாகக் கேட்டாள். ''அம்மா, கண்ணம்மாவுக்கு விஷசுரமாம்" என்று கண்ணீர் பெருகக்கூறினாள் கருணா. ''உனக்கு இதெல்லாம் ஆர் சொன்னது?" இது அன்னையின் வினா. ''கடிதம் வந்திருக்கம்மா. கண்ணம்மாவினால் எழுதக்கூட இயலவில்லையாம். ''கடிதம் எழுதக்கூடத் துணிஞ்சிட்டாளா? வரவர உலகம் கெட்டுப்போச்சு." "கடிதம் எழுதுவதில் என்னம்மா தப்பு? அதற்குக்கூட அவளுக்கு உரிமையில்லையா?" அவளுக்கு உரிமையில்லை

யென்பதுதான் தாயின் வாதம். ஆம், கண்ணம்மா சிறுபான்மை வகுப்பைச் சார்ந்தவள். சாதிவித்தியாசம் பாராட்டித்தான் இதுவரை அவர்கள் அன்புக்குத் தடைபோடப்பட்டிருந்தது. ''உனக்கு இதைப்பற்றி ஒன்றும் தெரியாது. நீ சின்னப் பிள்ளை'' என்று பதிலளித்தாள் தாய்.

''நான் ஒன்றும் சின்னக் குழந்தையில்லை. எனக்கு எல்லாம் தெரியும். அம்மா! கண்ணம்மாவுக்கு வருத்தம் கடுமையாம். என்னைப் பார்க்க ஆசையாக இருக்கின்றது என்று எழுதியிருக்கிருளம்மா?"

''ஓ, அவ்வளவு தூரத்துக்கு வந்திட்டாளா?"

''அம்மா, அப்படியெல்லாம் சொல்லாதீர்கள். அவள் உயிருக்குப் போராடிக் கொண்டிருக்கின்ருள். என்னுடைய உயிர்த்தோழி மரணவாயிலில் நிற்கின்ருளம்மா. ஐயோ! கடைசியாக ஒருமுறை-ஒரேயொருமுறை பார்க்க விரும்புகின்ருள். அவளை இந்த நேரத்திலாவது போய்ப் பார்க்கத்துடிக்கும் என்னைத் தடுக்காதீர்களம்மா. தயவு செய்துதடுக்காதீர்கள். உங்களைக் கெஞ்சிக் கேட்கிறேன். ஓமென்று சொல்லுங்களம்மா." கருணா கெஞ்சினாள்; கதறினாள்.

''கருணா, நீ என்னதான் அழுதாலும் நான் அவள் வீட்டிற்குப் போகவிடமாட்டேன். சொன்னால் சொன்னது தான்.'

''மானிப்பாய் ஆஸ்பத்திரிக்குத் தானேயம்மா." தாயின் உள்ளம் இதற்காவது இணங்காதா? இரங்காதா? என்று கருணா ஏங்கினாள்.

''ஆஸ்பத்திரிக்குக்கூட நீ போகக் கூடாது. குறைந்த சாதிக்காறரோடை என்ன உறவு வேண்டிக் கிடக்கிறது?'

''குறைந்த சாதி! அப்படியென்றால் என்னம்மா? இறைவன் உங்களையும் அவர்களையும் வித்தியாசமாகப் படைத்திருக்கிருன? அவர்களுக்கு கைகால் ஏதாவதுஇல்லையா? அல்லது உங்களுக்குக் கொம்புமுளைத்திருக்கிறதா? உங்கள் வீட்டிற்குள் அவர்கள் வரக்கூடாது. உலகமக்களுக்கே தந்தை தாயான அந்தஇறைவனின் திருக்கோயிலுக்குள் கூட அவர்களைப் போக வேண்டாமென்கிறீர்களே! அப்படிக் கூற உங்களுக்கு என்ன உரிமையிருக்கிறது? மிருகங்களுக்குக் கொடுக்கும் சலுகைகூட அவர்களுக்கு அளிக்க மறுக்கிறீர்களே? ஏன், உங்கள் சாதி வியாதியை உங்களுடன் வைத்திருங்கள். எங்கள் அன்புப் பிணைப்பை அறுத்தெறிய அதை உபயோகிக்காதீர்கள்." தன் கோபத்தையெல்லாம் கருணா மூச்சுவிடாமல் படபடவென்று கொட்டினாள்.

(9ம் பக்கம் பார்க்க)



அடடா! பொன்ட்ஸ் பாவித்திருக்கிருய், போலிருக்கே,
ஆகா, என்ன சுகந்தம்! என்ன அழகு!

அழகு பெண்மணிகள் தேர்ந்தெடுப்பது பட்டுப்போல் மிருதுவான; நேர்த்தியான பொன்ட்ஸ் டிரீம்பிளவர் டால்கம் பௌடர், ஏனெனில் அது அழகினுக்கு அழகுச்செய்து, ஸ்நானத்திற்கு பின் அனுபவிக்கும் குளிர் புத்துணர்ச்சியை எப்போதும் அளித்து, உடல் முழுவதும் இனிய நறுமணம் சூழ்ந்திருக்கச்செய்கிறது.

நறுமணம் சூழ்ந்த புத்துணர்ச்சியுடன்,
அழகிய தோற்றமளிக்க,
பொன்ட்ஸ் டிரீம் பிளவர் டால்கம் பவுடர்
பாவியுங்கள்.




475/65

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இறந்த பிறகு மீண்டும் உயிர் பெறும் நம்பிக்கை
## அதனால் பாதுகாப்புக் கல்லறை கட்டுகிறார்கள்

நாங்கள் இறந்த பிறகு தங்களுடைய உடல் கொஞ்சமும் கெட்டுப் போகாதபடி பாதுகாப்பாக வைக்கும்படி ஏற்பாடு செய்ய அமெரிக்காவில் நூற்றுக் கணக்கானவர்கள் முயற்சித்து வருகின்றனர். தங்களுடைய மரணநோய்க்கு வைத்தியத்துறையில் ஏதாவது ஒரு மருந்து கண்டுபிடிக்கப்படும்போது அதன் மூலம் மீண்டும் உயிர்பெறலாமென்னும் நம்பிக்கையில்தான் மேற்கூறிய முயற்சியில் ஈடுபட்டுள்ளனர்.

இந்த அடிப்படையில் முதலாவது உறைநிலைக் கல்லறை கூடிய விரைவில் லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அமையவிருக்கிறது. இக் கல்லறை ஐஸ் கல்லறை என்றும் குறிப்பிடப்படுகிறது.

பிரேதங்களை (நீர்) உறைநிலைக்கு 200 டிகிரிக்கும் கீழான குளிர் நிலையில் உறைய வைத்து அவற்றை ஸ்டெயின்லெஸ் உருக்கினாலான கூட்டுக்குள் அடுக்கி வைப்பதென்பது தான் ஐஸ் கல்லறை ஏற்பாட்டின், நோக்கமாகும். அந்த நிலையில் பிரேதங்கள் கொஞ்சமும் கெடாமல் பாதுகாப்பாக இருக்கும். வேண்டிய நேரத்தில் அவற்றை வெளியே எடுத்துக் கொள்ளலாம்.

மிச்சிகன் மாகாணத்தைச் சேர்ந்த பேராசிரியர் ராபர்ட் எட்டிங்கெர் என்பவர்தான் இந்த ஏற்பாட்டுக்கு யோசனை கூறி முதல் நடவடிக்கை மேற்கொண்டவர். ''சிரஞ்சீவத்துவ வாய்ப்பு' என்னும் தலைப்பில் அவர் ஒரு புத்தகமும் எழுதியுள்ளார். தன்னுடைய குடும்பத்தினர் இறந்த பிறகு அவர்களுடைய உடலை மேற்கூறியவகையில் பாதுகாத்து வைப்பதற்கு அவர் பணம் ஒதுக்கியள்ளார்.

இந்த ஏற்பாடுஅமெரிக்காவில் ஆயிரக்கணக்கான மக்களின் கவனத்தைக் கவர்ந்துள்ளது. உடல் எப்படி பாதுகாத்து வைக்கப்படும் என்பது பற்றி அவர்கள் விசாரித்து அறிந்து வருகின்றனர். லாஸ் ஏஞ்சல்ஸ் நகரில் அமைய விருக்கும் முதல்ஐஸ்கல்லறையில்4000 பிரேதங்களைப் பாதுகாக்க இடவசதி இருக்கும். மீண்டும் உயிர்பெற ஆசையுள்ளவர்களின் பிரேதங்கள் அங்கு அடுக்கிவைக்கப்படும். எல்லாச்செலவும் உட்பட செலவு ரூ. 20,000 ஆகும். இதனைக்கட்டிவரும் நிறுவனத்தின் தலைவர் கூறுகையில், ''இறந்தபிறகு நானும் அதில் இடம்பெறுவேன் என்றார்.

''நான் ஏன் இடம் பெறக்கூடாது. நான் மீண்டும் உயிர் பெறுவதற்குள்ள வாய்ப்பு இது ஒன்றுதான். இப்போதைய அதிர்ஷ்டத்தை விட அது நல்ல அதிர்ஷ்டம்" என்று செய்தியாளர்களிடம் கூறினார்.

### லண்டனில் கண் சேமிப்பகம்

பிரிட்டிஷ் கண் மருத்துவர்கள் கண்பிடித்துள்ள புதிய முறையொன்று, உலகெங்கிலுமுள்ள பல்லாயிரக் கணக்கான குருடர்களுக்கு பார்வை கொடுக்கக்கூடியதாக இறுதியில் அமையலாம்.

இப்புதிய கண்டுபிடிப்பைச் செய்தது வரையில் கண்பார்வையைத் திரும்ப அளிப்பதற்காகக் கொடையாளரிடமிருந்து பெற்ற கண்கள் அல்லது கண்ணுறுப்புக்களைக் குருடர்க்குப் பொருத்தும் அறுவைகள் மிகக்குறைந்த காலத்தில் செய்யவேண்டியவையாயிருந்தன. கொடையாளர்களிடமிருந்து பெறும் கண்களையும் கண்ணுறுப்புக்களையும் ஓராண்டுக்கும் அதிகமாக, ஏன் காலவரையறையின்றியே வைத்திருந்து எளிதாக அவற்றை இதர இடங்களுக்கும் அனுப்பிவைக்கப் புதிய கண்டுபிடிப்பு வழி செய்திருக்கிறது. லண்டனிலுள்ள வெஸ்ட் மினிஸ்டர் மருத்துவமனையில் நடைபெற்ற ஆராய்ச்சியில் மேற்கூறிய புதியமுறை கண்டுபிடிக்கப்பட்டது.

லண்டனிலுள்ள மூர்பீல்ட்ஸ் கண் மருத்துவமனையானது முதல் முதலாகக் 'கண் சேமிப்பகம்' ஒன்றைக் கட்டக்கருதியுள்ளது. அங்கு கொடையாளர்களின் கண்கள் சேமித்து வைக்கப்பட்டு, வேண்டும்போது அனுப்பிவைக்கப்படும். ஆயிரக்கணக்கான கண்களை அயல்நாடுகளுக்கு எதிர்காலத்தில் அதனால் அனுப்பிவைப்பது சாத்தியமாகலாம் என்று எதிர்பார்க்கப்படுகிறது. மேற்கூறிய ஆராய்ச்சியின் விளைவினால் "கண்சேமிப்பகம்" உருவாக்கும் கருத்து பிறந்தது என்பது குறிப்பிடத்தக்கதாகும்.

இரண்டு கட்டங்களில் அக் கண்டுபிடிப்பு வெளிப்பட்டது. கிளிசரால் எனப்படும் கரிநீர்ப்பாகுக்கரைச்சலில் உறைநிலைக்குக் கீழே 79டிகிரிசென்டிகிரேட்குளிர் நிலையில் கண்களை வைத்திருந்தால், ஒருமாதகாலமாக சேமித்து வைத்திருந்த பொருட்களைப் பயன்படுத்தி கண்ணைப் பொருத்தும் வெற்றிகரமான அறுவையைச் செய்யமுடிகிறது என்பதை ஆராய்ச்சிக்குழு முதல் முதலாகக் கண்டறிந்தது.

மேற்கூறிய முறைப்படி உறைநிலையில் வைக்கப்பட்டிருந்த கருவிழியின் மேற்தோலைக் கொண்டு அவர்களால் ஏழுபேருக்குப் பார்வை கொடுக்கமுடிந்தது. திரவ நீர்வழியில் உறைநிலைக்கு 196 டிகிரி சென்டிகிரேடுக்கும் குறைந்த நிலையில் உறைய வைக்கப்பட்ட கண்களைக் கொண்டு தொடர்ந்து சோதனைகள் செய்ததில் அவற்றை இன்னும் பல காலத்துக்குப் பதனப் படுத்திவைக்கலாம் என்பதும் கண்டறியப்பட்டது.

# நெஞ்சம் மறவா நினைவு

— திருமதி மகேஸ்வரிதேவி நவரத்தினம் —

மானிடப்பிறவி எடுப்பதற்குப் பூர்வ புண்ணியம் வேண்டும். எடுத்தும், கூன், குருடு, செவிடு இன்றிப் பிறத்தல் வேண்டும். இவையெல்லாமிருந்தும், தெய்வ பக்தியுடனும்தெய்வழிபாட்டுடனும் பிறத்தல் அரிதிலும் அரிது. அதனிலும் அரிது ஒரு ஜீவன் முக்தரைத் தரிசிக்கக்கிடைக்கும்பேறே. அப்படியொரு ஞானியை, ஜீவன் முக்தரை எங்களுடைய காலத்தில் தரிசிக்கவும், அவர்களது வாயிலிருந்து வரும் உயர்ந்த வாக்கியங்களைக்கேட்கவும், அன்பையும் ஆதரவையும் ஆசிகளையும் பெறவும் கிடைத்ததே எமக்கு இப்பிறவியில் கிடைத்தற்கரிய பெறுபேறாகும். இதனால் எங்கள் ஈழமணித்திருநாடு புகழும் புனிதமும் அடைந்துள்ளது.

''நல்லை நகர்க் கரசே
நானிலத்தோர் போற்றும்
செல்லப்பரென்னும்
ஞான தேசிகனே - தொல்
லுலகில்
யோகமுனி எந்தைதனைத்
தந்தளித்த தூயோனே
தேகமதே யானென்னுஞ்
சிந்தை யறு"

சுவாமிகளை யான் முதற் சந்தித்தது, 1925-ம் ஆண்டு வைகாசி மாதம் எங்கள் இல்லத்திலாகும். அதன் பின்னர், 1934-ம் ஆண்டு நடைபெற்ற எங்கள் திருமணத்தின்பின்பே சுவாமிகளைச் சந்திக்கவும், அவர்களது ஆச்சிரமத்தைத் தரிசிக்கவும் பேறுபெற்றேன்.

அன்று ஒரு வெள்ளிக்கிழமை. (பங்குனி உத்திரத்தன்றுஎங்கள்திருமணம். அதற்குஅடுத்தவெள்ளிக்கிழமை மாலைப்பொழுது. நாங்கள் இருவருமாக ஒரு பெரிய வெள்ளித் தட்டத்தில், புஷ்பம், பழம், கற்பூரம், சந்தனக்குச்சி முதலியனவெல்லாம் வைத்துவேறும் ஏதோவெல்லாம் வைத்து எடுத்துச் சென்றோம். நாங்கள் ஆச்சிரமத்தை அடைந்த பொழுது யாருமே அங்கு இல்லை. அருமையான சூழ்நிலை. அச்சூழ்நிலை எவருக்குமே உயந்த எண்ணங்களையும் மனச்சாந்தியையும் அளிக்கவல்லதாயிருந்தது. சுவாமிகளே தனித்திருந்தார்கள். அவர்கள் எங்களை எதிர்பார்த்திருந்தது போலவே இருந்தது. ஏதோ ஆனந்தமாகப்பாடிக்கொண்டிருந்தார்கள். இதனைத்தான் பின்னர் எனது கணவர் ''சுவாமி அவர்கள் இன்று நல்ல சந்தோஷமாக இருந்தார்கள் என்று எனக்குச் சொன்னார். கொண்டு சென்றவைகளை சுவாமிகள் முன் வைத்து நமஸ்கரித்துவிட்டு எழுந்து உட்கார்ந்தோம். சுவாமிகள் ஏதோ எல்லாம் என் துணைவருடன் பேசிக்கொண்டிருக்கும் பொழுது யாரோ இருவர் அங்கு வந்து நமஸ்கரித்துவிட்டு மறுபக்கத்தில் உட்கார்ந்தார்கள். வந்திருந்தவர்களிடம் சுவாமிகள் 'இவர்கள் யாரெனத்தெரியுமா" எனக்கேட்டதும் வந்தவர்கள் ''தெரியும்சுவாமி' என்றார்கள். பின்னர் சுவாமி அவர்கள் எனதுபெயரையும் நான் பிறந்தநக்ஷத்திரத்தையும்கேட்டார்கள்சொன்னேன், அதற்கு அவர்கள் சொன்னதாவது: ''ம்- இரண்டும் மெல்லினமாகத்தான் இருக்கிறது. அப்ப இவவையும் எங்கள் இடாப்பில் சேர்த்துக்கொள்ளுவோம்' என்றார்கள். சிறிது நேரத்தின் பின்னர் சுவாமிகளின் விருப்பத்தின்படி எங்களிருவருக்கும் உணவளிக்கப்பட்டது. அதன்பின்னர் சுவாமிகள் எங்களிருவருக்கும் தோடம்பழங்கள் அளித்ததும் அவர்களிடம் விடை பெற்றுக் கொண்டு எமது இல்லம்திரும்பினோம்.

அந்த நாட்களில் சுவாமிகள் அடிக்கடி எனது வாழ்க்கைத்துணைவரைச் சந்திப்பதற்கு எமது இல்லத்துக்கு வருவதுண்டு. சுவாமிகளைப் பற்றிப் பலரும் பலவாறாகச் சொல்லக் கேட்டிருந்தேன். அதன் பயனாக எனக்கும் முதலில் சுவாமிகளைச் சந்திப்பதற்குப் பயமாகவேயிருந்தது. என்னை சுவாமி ஏசுவாரோ அல்லது கோபிப்பாரோ என அஞ்சினேன். ஆனால் அப்படி ஒன்றும் இறுதிவரையில் சம்பவிக்கவில்லை. அன்பும் ஆதரவுமாகவே இருந்தார்கள். அவர்கள் அடிக்கடி 'இது நல்ல உலகம்; ஒரு பொல்லாப்புமில்லை; எப்பவோ முடிந்த காரியம் எனச் சொல்வதுண்டு. வீட்டுக்கு வந்திருந்துவிட்டுப் போகும் சமயங்களில், நாங்களிருவருமாக அவர்களை வழியனுப்பச் செல்வோம். அப்பொழுது சுவாமிகள் எங்களிருவரையும்பார்த்து 'நீங்கள் இரண்டுபேரும் ரிஷியும் ரிஷிபத்தினியும், இராமகிருஷ்ணரும் சாரதாதேவியும் எனச் சொல்லிவிட்டுப் போவார்கள்.

சுவாமிகள் ஒருவருடைய வாழ்க்கை முன்னேற்றத்திற்கு ஒழுக்கத்தையும், கடமையையும், ஊக்கத்தையுமேமுக்கியமாகச் சொல்லுவார்கள். அவர்களதுநற்சிந்தனையிலும் 'ஒழுக்கம் உயிரினும் சிறந்தது. ஒழுக்கமுடையார் எல்லாமுடையார் எனவும் எக்கருமத்தைச் செய்யும்பொழுதும் 'ஊக்கத்தோடும் [illegible] மனமகிழ்ச்சியோடும் செய்து [illegible] எனவும் கூறியிருக்கிறார்கள்.

ஒரு சமயம் 1948-ம் ஆண்டு என நினைக்கிறேன், எனது கணவர் வாதநோயினால் மிகவும் அவஸ்தைப் பட்டுக்கொண்டிருக்கும் சமயம் தமக்கேதோ செய்வதாகவும் சுவாமிகளைத்தாம் பார்க்க விரும்புவதாகவும் அறிவித்தார். அப்பொழுது அவர் பக்கலில் இருந்த காலஞ்சென்ற பெரியார் முதலியார் சு. திருச்சிற்றம்பலமவர்கள் ஆச்சிரமத்திற்குச்சென்று சுவாமிகளை அழைத்துவந்தார்கள். சுவாமிகள் பக்கத்திலமர்ந்து உரையாடத் தொடங்கியதும், தலையிலிருந்து ஏதோ ஒரு விதமான புகை வெளியேறுவதுபோன்ற ஓர் உணர்ச்சி என்கணவருக்கு ஏற்பட்டதாம். அதன்பின் அவரது நோயும் படிப்படியாகக் குறைந்து வரத் தொடங்கியது.

எனது கணவர் இறந்த செய்தியைக்கேட்டுச் சுவாமிகள் இங்குவரப் புறப்பட்டதாகவும், புறப்பட்டு வந்த சமயம் நடு வழியில் கார் நின்றுவிட்டதாகவும், எவ்வளவு முயன்றும் கார் நகர மறுத்துவிட்டதாகவும், பின்னர் இதனைப்பார்த்துக் கொண்டிருந்த சுவாமிகள் ''அப்போ என்னைப்போக வேண்டாம் என்றுதானாக்கும். சரி திருப்பு காரை' எனச் சொன்னதும் கார் ஓடத் தொடங்கியதாகவும் பின்னர் அறியலானேன்.

அடுத்த ஞாபகம், எனது கணவரின் மறைவுக்குப் பின் மன ஆறுதலின் பொருட்டு எனது மகனாரை சுவாமிகளிடம் அனுப்புவது வழக்கம். அப்படி அனுப்பும் போது எனது நினைவுகளுக்கெல்லாம் அவர்கள் மகன் மூலம் பதில் அனுப்புவார்கள். அப்படி ஒரு முறை யான் நினைத்துக்கவலைப்பட்டுக் கொண்டிருக்கும்பொழுது, அவர்கள் மகனிடம் ''இப்பதானே நட்டிருக்கு, அது வளர்ந்து வரவேண்டாமா? வளர்ந்து பூத்துக் காய்த்துத்தானே பழமாகும்" எனச் சொல்லியனுப்பினர், பதியவர்களின் மறைவுக்குப்பின் சுவாமிகள் எனக்குத்தோன்றாத் துணையாகவிருந்து அவ்வப்

(5-ம் பக்கம் பார்க்க)

## தலைவியின் ஏக்கம்!

—புலவர் ம. பார்வதிநா...

முல்லை மலர்ந்து கமழ்ந்ததடீ! - நல்ல
மோகனத் தென்றலும் வந்ததடீ!
அல்லல் விளைத்திடும் காமனுமே - கணை
ஐந்தொடும் வந்தனன் பைந்தொடியே

நெஞ்சக் கதவு திறந்ததடீ! - அவன்
நினைப்பினில் மேனி பொலிந்ததடீ!
பஞ்சணை நன்றாய் அமைந்திருந்தும் - அதைப்
பார்த்ததும் கோபமே தோன்றுதடீ!

ஊரினைக் காக்கின்ற காவலரும் - மற்றும்
ஓர் புறம் நீங்கியே சென்றுவிட்டார்!
பேரொலி செய்திடும் நாய்களுமே - காதற்
பெருமையைத் தேர்ந்தே கண் துஞ்சினவே!

ஆசையைத் தூண்டிய திங்களுமே - மெல்ல
ஓசையில்லாமல் மறைந்ததடீ!
நேசத்தைப் போற்றிய காதலனுர் - இந்த
நேரத்தில் வாராமை ஏனடியோ?

ஓயாமல் என்றனை நோக்கிவரும் - அன்புத்
தாயாரும் கண்கள் உறங்கிவிட்டார்!
மாயாத என் ஆசை தூங்கவில்லை - அதை
மாய்ப்பவர் ஏன் இன்னும் சேரவில்லை!

சந்தர்ப்பம் முற்றாக வாய்த்திருந்தும்-அந்தத்
தலைவன் வராததும் ஏனடியோ?
நொந்த மனத்துக்கு நன்மைசெய்வேன்-இந்த
நொடிக்குள் வராவிடின் வாழ்வும் உண்டோ?

"லேடன்" LEYDEN
தயாரிப்புகள்:-
● பெனியன்கள்
● ஸ்போட் சேட்டுகள்
● ரீ சேட்டுகள்
● கால் மேசுகள்
(Nylon & Woolen)
லேடன் இன்டஸ்றீஸ் லிமிடெட்
7, ஆஸ்பத்திரி வீதி :: :: யாழ்ப்பாணம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஈழநாடு
EELA NADU National Tamil Daily Post Box 49, Jaffna
Telegrams EELA NADU Jaffna. Phone: 389
யாழ்ப்பாணம் விசுவாவசு ஆண்டு சித்திரை மீ 13உ (25-4-65)

# இன்ப நிலை கிடைக்குமா?

"எங்கள் மதத்தில் சேருங்கள், உங்கள் துன்பமெல்லாம் தீரும்" என்று மதவாதிகள் ஒவ்வொருவரும் கூறுகின்றனர். 'எங்கள் மதம்தான் நாட்டின் ஒரே மதம். அந்த மதம்தான் அரசாங்க மதமாக இருக்கவேண்டும். அதன் வளர்ச்சிக்குத்தான் அரசாங்கம் உதவவேண்டும். அரசாங்கத்தில் எந்த உயர் பதவியிலும் அந்த மதத்தைச் சார்ந்தவரே இருக்கவேண்டும்' என்று அரசியல் மதவாதிகளின் கூக்குரல் கேட்கிறது.

இச்சமயத்தில் "எல்லா மதங்களும் ஒன்றே அவற்றுள் வேற்றுமை இல்லை. மதத்தின் பெயரால் மக்கள் வேற்றுமைப்படுவது மக்களுக்கு நல்லதல்ல. அவர்களுக்குத் துன்பங்கள் அதிகரிக்கவே இது வழிசெய்யும்" என்று சமய சமரசக்குரல் ஒலிக்கிறது.

மக்களில் யாருக்குத் துன்பமில்லை? எத்தனையோ கஷ்டங்கள், கரைச்சல்கள். வீட்டுக்கஷ்டம், வேலைக்கஷ்டம், பணக்கஷ்டம், மனக்கஷ்டம் இப்படி எத்தனையோ. அமைதி எங்கேகிடைக்கும் என்பது தான் ஒவ்வொருவரினதும் கேள்வி. பூங்காவிலோ, நாடகங்களிலோ, சினிமாத்தியேட்டர்களிலோ அமைதியைக்காண மனிதன் ஓடுகிறான். அவனுக்கு அங்கு அமைதி கிடைத்துவிடுகிறதா? ஆலயங்களில் கூட அவன்தேடும் அமைதி சுலபமாகக் கிடைத்து விடுவதில்லை. மனதை ஒரு நிலைப்படுத்த முடியாத அவசர உலகில் ஆலயத்திற்குச் செல்வதால் மட்டும் அமைதி கிடைப்பதாயின் உலகில் ஆறுதலே இருக்கும்.

மனிதனின் துன்பத்தையும் அமைதியைத் தேடும் அவனது மனவேட்கையையும் கண்டுதான் "எங்களிடம் வாருங்கள்; உங்களுக்கு அமைதி கிடைக்கும்" என்கிறார்கள் மதவாதிகள். எந்த மதத்தில் சேர்ந்தாலும் விரும்பிய அமைதி கிடைக்க வழியுண்டா? மதங்களில் தான் எத்தனை பிரிவுகள், எத்தனை உட்பிரிவுகள்? இந்தோனேஷியாவும் மலேசியாவும் ஒரே மதத்தைச் சேர்ந்தமக்கள் வாழும் நாடுகள். அந்த இரண்டு நாடுகளுக்கிடையிலும் ஒற்றுமை நிலவுகிறதா? இரு நாடுகளுக்கிடையிலும் அமைதிதான் நிலவுகிறதா? ஒரே மதத்தைச் சேர்ந்த மக்களைக்கொண்ட அந்த இருநாடுகளுக்கிடையிலும் சண்டை சச்சரவுகளை நிறுத்தி ஒற்றுமையேற்படுத்தி அமைதி நிலவச்செய்வதில் வேறு மதங்களைச் சார்ந்த மக்கள் வாழும் நாடுகள் முயற்சி செய்கின்றன.

மதம் வேண்டாம்; எல்லோரும் பொது என்று கூறும் கம்யூனிஸ்ட் நாடுகளுக்கிடையில் தான் இன்று ஒற்றுமையும் அமைதியும் நிலவுகிறதா? அங்கும் கோஷ்டிப் பூசல்; கம்யூனிஸ சித்தாந்தச் சண்டை. புரட்சியின் மூலம் அமைதியைக்காணலாம், மக்கள் நல்வாழ்வு வாழலாம் என்று கூறும் புரட்சி வாதிகளுக்கிடையிலேயே மோதலும் பூசலும்.

இந்நிலையில் மனிதன் வாழ்வில் அமைதியைக் காண்பதற்கு வழி என்ன? சேவை மனப்பான்மை வளர்ந்துவிட்டால் போட்டிபூசலுக்கு இடமில்லை. போட்டியும் பூசலும் இல்லையெனில் அங்கு சாந்தியும் சந்தோஷமும் குடிகொள்ளும். 'மக்கள் சேவையே மகேஸ்வரன் சேவை.' சேவை சுயநலமற்ற சேவையாக இருக்கவேண்டும். "அன்பர்பணி செய்ய ஆளாக்கிவிட்டுவிட்டால் இன்பநிலை தானே வந்தெய்தும்' என்பது அப்பரடிகளவாக்கு. மருணீக்கியாராக விருந்த தேவசேனனை, 'நாவுக்கரசர்' என்று 'பட்டம்' பெற்ற அப்பரடிகள் அடைந்த துன்பம் கொஞ்சமா? கடலில் கல்லுடன் கட்டி வீசினர். சுண்ணாம்புக்காளவாயில் வைத்துப்பூட்டினர். இப்படி எத்தனையோ துன்பங்கள். ஆனால் அவர் மன உறுதி தளர்ந்ததா? "இன்பமே எந்நாளும், துன்பமில்லை" என்றார். இறைவன் திருவடியை மறவாதவர் அவர். தான் செய்யும் அனைத்தும் இறைவனே செய்விக்கின்றான் என்பதை உணர்ந்தவர். உழவாரத்திருப்பணி செய்து பெரும் புரட்சியையே செய்தவர். அவர் கூறும் இன்பநிலை எமக்கும் கிடைக்கக் கூடியதுதான். நாளை திங்கட்கிழமை அப்பரடிகள் குருபூசை இத்தினத்திலாவது அவர் அடைந்த இன்பநிலையை நாமும் அமைதியுற்று இறைவனின் கருணையை நாடவேண்டாமா? அன்பர் பணி செய்யவும் அவனருள் வேண்டும்.

# உழவாரத் தொண்டர் நாவுக்கரசர்

## நாளை குருபூசை தினம்

'மீசாலைக் கந்தையா"

நாளை திங்கட்கிழமை திருநாவுக்கரசுநாயனர் குருபூசை தினமாகும். உழவாரத்தொண்டு மூலமும், தேவார இசைமூலமும் இறைவனைக் கண்டு சைவத்துக்கு பெருந்தொண்டாற்றிய நாயனரது குருபூசை சைவமக்கள் உள்ள இடமெல்லாம் கொண்டாடப்படுகின்றது இலங்கையிலும் பல்வேறு சைவஸ்தாபனங்களும் குருபூசைகளை நடத்த ஒழுங்குகள் செய்துள்ளன. நாவுக்கரசரின் குருபூசை தினத்தையொட்டி இக்கட்டுரை இங்கு பிரசுரமாகிறது.

"கட்டகுறை தொட்ட குறைக்காக இவ்வுலகிற் பிறந்து எண்பத்தோராண்டு வாழ்ந்து, தமது பிறவிப் பிணியை நீக்கியதோடமையாது, "நாம் பெறுமின்பம் பெறுகவிவ் வையகம்" என்னும் பெருநோக்குடன், இப்பூவுலகிற் பிறந்தோர் தங்கள் பிறவிப்பிணியை ஒழிக்கும் வழியை வாக்காலும் செயலாலும் காட்டியவர் மருள்நீக்கியார் என்ற திருநாவுக்கரசராவர்.

நடப்பதெல்லாம் நன்மைக்கே என்று ஒரு பழமொழியுண்டு. நாவுக்கரசர் வாழ்க்கையிலும் இது சரியாக அமைந்தது. செவ்வழியைக் காணாது அல்வழியில் அலைந்தார் தருமசேனர். அவருக்கு நல்வழியைக் காட்ட விரும்பியது பரம்பொருள். இவருக்குத்தாங்க முடியாத சூலைநோயைக் கொடுத்தது பரம்பொருள். இந்நோயை நீக்கவழிதேடிய நாவுக்கரசருக்குப் பிறவிநோயே தீரக்கூடிய வாய்ப்புக் கிடைத்தது.

நாம் சரியை, கிரியை. யோகம், ஞானம் ஆகிய நான்கு மார்க்கங்களால் முத்தியடையலாம் என்று சைவசித்தாந்தம் கூறுகின்றது. நாவுக்கரசர் கிரியா மார்க்கமாக முத்தியடைந்தோராவர். உழவாரப்பணி செய்தலையே இவர் மகத்தான தொண்டாக மேற்கொண்டார். 'நித்தலுமெம்பிரானுடைய கோயில்புக்கு புலர்வதன் முன்னலகிட்டு மெழுக்குமிட்டுப் பூமாலை புனைந்தேத்திப் புகழ்ந்து பாடுதலே இவர் காட்டிய கிரியா மார்க்கம்.

எண்பத்தோராண்டு இறைபணி பூண்ட பழுத்த அனுபவசாலியான நாயனருக்கு அப்பர் என்ற பெயர் சாலப் பொருத்தமானது. இவருடைய அருட்பாக்கள் 4, 5, 6-ம் திருமுறைகளாகவகுக்கப்பட்டிருக்கின்றன. இவ்வருட்பாக்களில் சரியா மார்க்கங்களையும், அனுபவ முடிபுகளையும் காணலாம். சிலஇடங்களில் நாயனரவர்கள் பெரிய ஓர் ஆசானைப் போன்று பரம்பொருளைக் காட்டுகின்றார்.

மனிதர் காளிங்கு வம்
மொன்று சொல்லுகேன்
கனிதந் தாற்கனி
யுண்ணவும் வல்லிரே
புனிதன் பொற்கழல்
ஈசனெனுங் கனி
இனிது சாலவு
மேசற்ற வர்கட்கே.

இவ்விடத்தில் நாயனர் கீழ்ப் பிரிவு மாணவனொருவனுக்கு ஓராசிரியர் கையாளும் முறையைக் கையாளுகின்றார்.

"மனிதர்களே, இங்கே வாருங்கள். நான் ஒரு கதை சொல்லுகின்றேன் கேளுங்கள். உங்களிடத்தில் இனிய ஒரு பழத்தைத் தந்தால் நீங்கள் அதை விரும்பி உண்ணுவீர்களல்லவா? இவ்வுலகத்தில் ஒரு கனி உண்டு. அது ஒப்பற்றகனி. இனிமையான கனி. அதுதான் பரம்பொருளாகிய கனி என்று மிகவும் இலகுவான வழியைக்கையாளுகின்றார்.

இரக்கமற்ற சமணர்கள் நாயனரைக் கொல்ல நினைத்து சுண்ணாம்பறையில் போட்டுப் பூட்டினார்கள். ஒன்றிரண்டு நாட்களல்ல; ஏழு நாட்கள். இதுவும் அவருக்கு நன்மையாகமுடிந்தது நாயனர் தனிமையில் சிவத்தைக் கண்டார். சிவானந்தத்தை - பரமானந்தத்தை அனுபவித்தார். பிரேதம் எப்படி இருக்கிறது என்று பார்க்கப்போன சமணர்கள் திகைத்தார்கள். நாயனர்,

மாசில் வீணையும்
மாலை மதியமும்
வீசு தென்றலும்
வீங்கிள வேனிலும்
மூசு வண்டறை
பொய்கையும் போன்றதே
ஈச னெந்தை
யிணையடி நீழலே.

என்று பாடி அவர்களுக்கு நன்றி பாராட்டினார்.

ஆகவே, இத் தினத்திலே அன்னதானம் செய்வதோடமையாது, நாமும் நமது பிறவிப் பெருங்கடலை நீந்துதற்கு ஏற்ற சில கிரியைகளையாவது செய்வோமென்று திடசங்கற்பம் செய்வோமாக,

# இலிங்கோபநிடதமும் அதன் தமிழ் தாற்பரியமும்

எழுதியவர்: வண்ணை சிவ. ஐயம்பிள்ளை சிவாசாரியார், 'இரேணுகாவாசம்' கீரிமலை. வெளியிட்டோர்: சிவத்திரு இ. நவரத்தினக் குருக்கள், இலிங்காயதர் சமூக சங்கக் காரியதரிசி, சிவ. (இலிங்கி) பிராமண சமூக சங்கம், யாழ்ப்பாணம்.

இலிங்கோபநிஷத் தென்றால் தோற்ற ஒடுக்கத்துக்கு காரணமான சிவசக்திகளின் குறி. குருவின் சமீபத்திலிருந்து பிரமமாகிய இலிங்க தாரணம் பெறும் ஒவ்வொருவருக்கும் நிச்சயமாக மலமாயாகன்மத்தை நீக்கி சிவசாயுஜ்ய சிவாத்வைதத்தைப் பெறும் வித்தையைச் சொல்லுகின்றது இலிங்கோபநிஷத் என்னும் இச்சிறு நூல்.

"பிரமபாவமிதம் லிங்கம் தாரயேத் எனவும் பஞ்சாட்சரமயம் சம்பும் பரபிரஹ்ம சுவரூபிணம் என்ற பஞ்சப்பிரமோபநிஷத்திலும் கூறுவதினாலும் சிவசம்பந்தமாகிய லிங்கதாரணமே மோட்சத்தைக் கொடுக்குமென்று கூறுகின்றன.

"வீரமாகிய வேதியர்' (வீரசைவப் பிராஹமணர்) என்பதை திருஞான சம்பந்தமூர்த்தி நாயனரும் எவரும் செய்யமுடியாததொன்றைச் சாதிப்பவன் வீரன் [illegible] லாத ஒருவர் இலிங்கதாரணத்தை செய்யும் வீரத்தையுடைய சைவருக்கு வீரசைவரெனப்பட்டது. "வீரமாகிய வேதியர்' எனக்கொண்டு இலிங்கதாரணத்துடன் உபநயனமுடைய ஆராத்யப் பிராமணர் எனச்சொல்லப்பட்ட இந்த லிங்கோபநிஷதம் மைசூரில்கன்னடபாஷையில் அச்சிட்ட பிரதியைக் கொண்டுவண்ணை இரேணுகவாசம் அனுதிசைவ பரம்பரை வீரசைவ சிவ. ஐயம்பிள்ளை சிவாரசாரியர் அவர்களால் தமிழில் எழுதப்பட்ட தாற்பரியத்துடன் வெளிவந்திருக்கிறது.

இது "இலிங்க லட்சணம் தேகமேலிங்கம் சிவனே சிவன். தேகத்தின் சிரசில் உயர்ந்தபாகமாகிய உச்சியே கயிலாயம். தேகப்பிரமாணப்படியே வழிபாடாற்றும் லிங்கத்தின் பிரமாணம். பஞ்சமலங்களும் லிங்கரூபம், பிரமமே லிங்கம். சிவசக்திகளின் குறியே லிங்கம். குறியே போற்றி. ஜீவனிலும், மனத்திலும், அறிவிலும், சிவசம்பந்தமே லிங்கதாரணம், சைவம் என்பவை போன்ற. அரிய பெரிய தத்துவங்களை விளக்கும் இந்நூல் சைவர்களுக்கும், வேதாந்திகளுக்கும் சமரச மார்க்கத்தை கூறும்.

பிரமசாரி, கிருகஸ்தன் வானப்பிரஸ்தன், சன்னியாசி ஆகிய இவர்களில் சன்னியாசி சிரேஷ்டமுடையவன். இவர்களிலும் இலிங்கதாரி சிரேட்டமுடையவன். வருணச்சிரமம் கடந்த அத்யாசிரமியினும் இலிங்கதாரி சிரேட்டமுடையவன். ஏனெனில், 'சிரசிமஹா தேவதிஷ்டது' என்ற வாக்கியப்படி சிரசில் இலிங்கல் தரித்திருப்பதால். (பக்கம் 10)

இதுமாதிரி பல சுலோகங்களின் தாற்பரியம் நூலில் இடம் பெற்றிருக்கின்றன.

# இசையில் கதை

(5ம் பக்கத் தொடர்ச்சி)

அரண் செய்ததுபோல வேறெங்கும் செய்யவில்லை. இசையைத்தவிர சிற்பம், ஓவியம், நாட்டியம் முதலிய மற்ற நுண்கலைகளும் கோயில்களிலேயே பாதுகாக்கப்பட்டன. மதவளர்ச்சிக்கென்றிருந்த ஆதீனங்களும் மடங்களும் இசையையும் இசைக் கலைஞரையும் ஆதரித்தன.

பிற்பாடு, ஜனநாயகயுகம் பிறந்தது. அரசியல் மாறுதல்களினுல் அரண்மனைகளும், அரசர்களும், ஜமீந்தார்களும் மறைந்தனர், இசையும் இசைக்கலைஞர்களும் சாதாரணபொதுமக்களின் தயவை நாடவேண்டி வந்தது. முன்பு தர்பார்களில் கச்சேரி செய்த வித்வான்கள் இப்பொழுது மேடைகளில் உட்கார்ந்து மகாஜனங்களை மகிழ்வித்தார்கள். ஒரு குறிப்பிட்ட சிலர் என்றில்லாமல் எல்லோரும் கேட்டு இன்புறும் பொருளாக இசைமாறியது.

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிக்கலுக்குப் பின் சிக்கல்கள்

## (1)

வியட்னும்பிரச்னையைத் தீர்க்க நிபந்தனையற்ற பேச்சுக்கள் நடத்தவேண்டும் என 17 மண்டல சார்பற்ற நாடுகள் விண்ணப்பித்துக் கொண்டன. ஆனுல் இதற்குப் பூர்வாங்கமாக, வட வியட்னும் மீது குண்டுவீசுவதை அமெரிக்கா தற்காலிகமாகக் கைவிடவேண்டும் என்பது இந்த நாடுகள் சிலவற்றின் கருத்து.

## (2)

நிபந்தனையற்ற பேச்சு நடத்தத் தயாராய் இருப்பதாக அமெரிக்க ஜனுதிபதி அறிவித்தார். ஆனுல் குண்டு வீச்சை நிறுத்த முடியாது; தாக்குதல் நடக்கும்போதே பேச்சுக்கள் நடக்க வேண்டும் என்பது அமெரிக்காவின் நிலை.

# உலகமேடை

## (3)

அமெரிக்க ஜனுதிபதியின் நிபந்தனையற்ற பேச்சு வார்த்தை யோசனையை ஏற்கமுடியாது. பேச்சுக்கள் நடக்கவேண்டுமானுல் அமெரிக்கத் துருப்புக்கள் வியட்னுமிலிருந்து வெளியேற வேண்டும். வியட்காங் கொரில்லாக்களுடனும் ஆலோசனை கலக்கவேண்டும். குண்டு வீச்சை நிறுத்த வேண்டும். தென்வியட்னும் தனது தலைவிதியைத்தானே நிர்ணயித்துக்கொள்ளும்படி சுதந்திரமாக விடப்பட வேண்டும் என்பது வட வியட்னுமின் நிபந்தனை.

## (4)

அப்படிச்செய்யமுடியாது. குண்டுவீச்சை நிறுத்திஞல் வடவியட்னும், வெளியார் (ரஷ்யா) உதவியுடன் ராக்கெட்டுகளை நிறுவிக்கொண்டு விடும். அமெரிக்க துருப்புக்களை வாபஸ் பெற்ருல் தென்வியட்னும்கம்யூனிஸ்ட் வடவியட்னுமின் வயிற்றுக்குள் சுலபமாகப் போய் விடும். இது தென்வியட்னுமிய நண்பர்களின் விஷயத்தில் அமெரிக்கா மேற்கொண்டுள்ள கடமையைக் கைவிடுவதாகும் என்பது வாஷிங்டனின் இரண்டாவது நிலை.

## (5)

வடவியட்னுமின் 4 நிபந்தனைகளைக் கொண்ட யோசனையை சீனு ஆதரிக்கிறது. ரஷ்யாவும், மற்றும் பல கம்யூனிஸ்ட் நாடுகளும் ஆதரிக்கின்றன.

## (6)

அமெரிக்கா தொடர்ந்து வடவியட்னுமைத் தாக்கினுல் ரஷ்யாவும் அஸ்திரங்கள் உட்பட நவீனஆயுதங்களை அனுப்பும். ரஷ்யத் தொண்டர்களையும் அனுமதிக்கும். இது சோவியத்தின் 2-வது அறிவிப்பு.

## (7)

அமெரிக்கா யுத்தத்தை விஸ்தரித்தால் சீனமக்கள் அமெரிக்கர்களைப் பலவந்தமாகத்துரத்தியடிக்கபோரில் இறங்குவார்கள். அவர்களை விரட்ட உலக இயக்கம் ஆரம்பமாகும். இது சீனுவின் 3-வது மிரட்டல்.

## (8)

சீனுவின் மிரட்டல் எங்களை ஒன்றும் செய்யமுடியாது. ரஷ்யா வடவியட்னுமில் ராக்கெட்டுகளை நிறுவவிடாமல் குண்டுவீசித் தாக்குவோம் என்பது அமெரிக்காவின் மூன்ருவது முக்கிய அறிவிப்பு.

## (9)

சம்பவங்கள் துரிதமாக உருவாகின்றன. திபேத்திலுள்ள சீன விமானப்படைகள் பல, உள்நாட்டுக்குத் திரும்பக் கொண்டுவரப்பட்டிருக்கின்றன. வடவியட்னும் தலைநகர் ஹானேயிலிருந்து பெண்களும், குழந்தைகளும் காலிசெய்யப்படுகிருர்கள். இதற்கிடையில் அமெரிக்க, தென்வியட்னும் விமானங்கள் பல வடவியட்னும் நகரங்களில் சிவிலியன்களை வெளியேறுமாறு துண்டுப் பிரசுரங்களைப் போட்டன. அமெரிக்காவின் நிலையை பெரும்பாலான மேற்குநாடுகளும், மற்றும் சில நாடுகளும் ஆதரித்திருக்கின்றன.

## (10)

ஹாவாய்த் தலைநகர் ஹொனலுலுவில் ஜெனரல் வீலர், ஜெனரல் டெய்லர், திரு. மக்னமாரா உட்பட பல உயர்தர முப்படைத் தலைவர்களும், ராஜதந்திரிகளும் மகாநாடு கூடி தென் வியட்னுமுக்கு மேலும் ராணுவ உதவி அளிப்பதென்றும், அமெரிக்க பலத்தை அதிகரிப்பதென்றும் முடிவு செய்திருக்கிருர்கள்.

## (11)

வியட்காங் கொரில்லாக்களுக்கும், வடவியட்னுமுக்கும் எதிராக அமெரிக்காவும் தென்வியட்னுமும் தனித்தனியாகவும், கூட்டாகவும் தாக்குதல் நடத்திவருகின்றன. வியட்காங் இலக்குகளில் அமெரிக்கவிமானங்கள் குடைபிடிக்க தென் வியட்னும் துருப்புக்கள் போரில் ஈடுபட்டு வருகின்றன.

## (12)

இச் சம்பவங்கள் ஒருபுறமிருக்க, ஐ. நா. வும், வேறு பல நாடுகளும் எத்தனையோ வகையில், வியட்னும் பிரச்னையைத்தீர்க்க ஏராளமான ராஜதந்திர முயற்சிகளில் ஈடுபட்டு வருகின்றன.

விஷயங்கள் எப்படியெல்லாம் போய்க்கொண்டிருக்கின்றன. ஒரு சிக்கல் எப்படி ஒன்பது சிக்கலாக உருவாகி வருகிறது என்பதற்கு இவை சில உதாரணங்கள்.

★

# கிரிக்கெட் உலகிலே

ஆஸ்திரேலியாவின் கிரிக்கெட் ஏகாதிபத்தியத்தை மேற்கிந்தியத் தீவுகள் இப்போது தகர்த்துவருகின்றன. சர்வதேச கிரிக்கெட் தலைமையை ஆஸ்திரேலியாவிடமிருந்து அது கைப்பற்றும் நாள் இன்னும் சிலநாட்களுக்குள் பூர்த்தியாகிவிடும் என எதிபார்க்கலாம்,

மொத்தம் நடைபெற்ற 3 டெஸ்டுகளில் இரண்டை மேற்கிந்தியர் வென்றுவிட்டார்கள். மற்ருென்று வெற்றிதோல்வியின்றிமுடிந்தது. இன்னும் இரண்டு டெஸ்டுகள் மட்டும் பாக்கியிருக்கின்றன. இரண்டையும் ஆஸ்திரேலியர் வென்ருல்தான் மேற்கிந்தியருடன் சமநிலைக்கு வரமுடியும். ஒன்றை வென்ருலும் கூட தங்கத்தட்டில் உலக கிரிக்கெட் கிரீடத்தை வைத்து, மேற்கிந்தியர்களிடம் ஒப்படைத்துவிடவேண்டும். என்ன துரதிருஷ்டம்!

கிரிக்கெட் உலகில் தனக்கு ஒப்பாரும் மிக்காருமின்றி ஏகபோக தர்பார் நடத்திய ஆஸி. வெள்ளையர் முதல்தடவையாக ரப்பரை கறுப்பர்களிடம் ஒப்படைக்கப் போகின்றனர்! எனவே அடுத்து நடைபெறவிருக்கும் இரண்டு டெஸ்டுகளின் போது ஆஸ்திரேலிய ஆட்டக்காரர்களின் நெஞ்சம் ‘‘பிக்பென்’ கடிகாரத்தைப் போல் ‘டக்டக்’ என அடித்துக்கொள்ளும்,

மேற்கிந்தியருக்கு ஒரு அற்புதமான காப்டன் கிடைத்திருக்கிருர். அவர்தான் தற்போது சோபித்து வரும் சோபர்ஸ். தந்திரம், திறமை, லாவகம் போன்ற யுக்தியை ஜோராகப்பயன்படுத்துகிருர். மேற்கிந்தியரின் அதிர்ஷ்டமே இது. அது மட்டுமா? கிப்ஸ் இருக்கிருர். புச்சர் இருக்கிருர். கன்ஹாய் இருக்கிருர். அநேகமாக மேற்கிந்திய வீரர் எல்லோருமே சிறந்த துடுப்படிவீரர்கள். ராட்சஸ பந்துவீச்சு நிபுணர்கள். பிடியிலும் தீரர்கள்.

3-வது டெஸ்டில் கிப்ஸ் 6 விக்கெட்டுகளை வீழ்த்திஞர். அவ்வளவும் ராட்சஸ விக்கெட்டுகள். அவர் கொடுத்த ரன்கள் 29 மட்டுமே. 10-வது விக்கெட்டை வீழ்த்த அவர் ரன் எதுவும் கொடுக்கவில்லை. இரண்டே பந்தில் வீழ்த்திஞர்!

கன்ஹாய் இருக்கிருரே, அவர் மேற்கிந்தியக்கோஷ்டியில் ஒரு நட்சத்திரம். அவரது முன்னேர்கள் இந்தியாவிலிருந்து சென்று குடியேறியவர்கள். அவர் அடித்தால் சிக்ஸர்கள் சிறக்கும். பவுண்டரிகள் பறக்கும். எத்தகைய தந்திரமான பந்து வீச்சையும் அவரது துடுப்பு தடுக்கும். தடுப்பது மாத்திரமன்றி சாஸ்திரீய அழகுடன் அடிக்கும். உலக உதைபந்தாட்டத்தில் பிரேஸில் நாட்டின் பேலேப் போல, இங்கிலாந்தின் மெத்யூவைப்போல மேற்கிந்திய கிரிக்கெட்டில் அவர் ஒரு நட்சத்திரம். உலக கிரிக்கெட் ரசிகர்களுக்கும் அவர் ஒரு நட்சத்திரம் தான்.

மேற்கிந்தியக் கோஷ்டி அடுத்த ஆண்டு இந்தியா செல்கிறது. திரும்பும் வழியில் 3 நாள் கொழும்பில் விளையாட விருக்கிருர்கள். சென்றமுறை மேற்கிந்தியர் வந்திருந்தபோது கன்ஹாயின் சிக்ஸர்களைக் கண்டு இலங்கை ரசிகர்கள் பிரமித்துவிட்டார்கள். அவர்கள் மத்தியில் கன்ஹாய்க்கு மூச்சுத்திணறலே ஏற்பட்டுவிட்டது. இலங்கையின் முதல்தர ஆங்கிலப்பத்திரிகைகளில் எல்லாம் முதல் பக்க தலைப்புச்செய்தி இந்த கிரிக்கெட் ஆட்டமாக விளங்கியது. மேற்கிந்தியர்கள் அடுத்தமுறை கொழும்பு புறப்படும் போதும் [illegible] காக பல பத்திரிகைகள் காத்திருக்கின்றன.

# இசையின் கதை

## ஜனநாயக சங்கீதம்!

— வி. என். பி. —

[illegible]ற்காலத்தில் வாழ்ந்த பாணரும் பாணினியரும் அரசர்கள் முன்னிலையில் தமது இசைத்திறனைக் காட்டிப் பொன்னும் பரிசும் பெற்றனர். பலவிதயாழ்களிலும், குழலிலும், வாய்ப்பாட்டிலும் அவர்களுடைய இசை ஒலித்தது. மன்னர்கள் அவர்களுக்கு எவ்விதகுறையுமில்லாமல் போஷித்தார்கள். ஒரு மன்னனிடம் பரிசுபெற்ற பாணன் அவ்வரசனை அடையும் மார்க்கத்தை இன்னெருரு பாணனுக்கு ஆற்றுப்படுத்தும் (காட்டிக்கொடுக்கும்) நூல்களே எழுதப்பட்டனவென்ருல் இசைக்கு அக்காலத்திலிருந்த மதிப்பையும் செல்வத்தையும் ஒருவாறு அளந்துகொள்ளலாம். குறுநில மன்னர்களும், பிரபுக்களும் இசைக் கலைஞர்களையும் குடும்பங்களையும் ஆதரித்தார்கள்.

பின்னர் ஒரு காலத்தில் இசைக்கும் அதைப் பயிலுவோருக்கும் மதிப்புக்குறையவேண்டி நேரிட்டது. இசையும் அதோடு சம்பந்தப்பட்ட நாட்டியம் முதலிய களியாட்டங்களும் போர் செய்தல், பொருளீட்டுதல் போன்ற நல்ல காரியங்களிலிருந்து பொதுமக்களின் மனதை மாற்றி விட்டன என்று நினைத்த சிலமன்னர், இசைக்கு ஆதரவு கொடுப்பதை அறவே தவிர்த்தனர். வட இந்தியாவில் இருந்த சில முகலாய மன்னர்களும் தென்னிந்தியாவில் மராட்டியர்களும் இந்த இசைப் பகிஷ்காரத்தை நிகழ்த்திஞர்கள். சீனதேசத்தில் ஒரு பெரிய சக்கரவர்த்தி இசையில் கொண்டவெறுப்பினுல் நாட்டிலுள்ள இசை நூல்களையும் இசைக் கருவிகளையும் சுட்டெரிக்கும்படி கட்டளையிட்டாஞம்!

இசை பயிலுவதால் மனிதன் ஆத்ம ஈடேற்றத்திற்கு வழிதேடாமல் லௌகீகத் துறையில் மிதமிஞ்சி ஈடுபடுகிருன் என்றஞ்சிய ஜைனர், பௌத்தர் போன்ற மகப் பிரசாரகர்கள், அவர்களுடைய செல்வாக்கு நாட்டில் ஓங்கியிருந்த காலத்தில், இசையை வெறுத்து ஒதுக்கிஞர்கள்.

இந்தவிதமாக இசையின் வளர்ச்சிக்குப் பலவிதஇடையூறுகள் உண்டானபோதிலும், மனிதனுக்கு இயற்கையாகவே கலையுணர்ச்சி இருப்பதனுல், அது எல்லாவிதமான சிக்கல்களையும் அறுத்தெறிந்து கொண்டு தானுகவே வளரமுடிந்தது.

கர்நாடக சங்கீதத்தைப் பொறுத்தவரையில், தென்னிந்தியாவில் வாழ்ந்தவர்கள் ஒரு மிகப் புத்திசாலித்தனமான காரியத்தைச்செய்தார்கள். மன்னர்கள், பிரபுக்களின் ஆதரவு குறைந்து, அரசியல் கிளர்ச்சிகளும், படையெடுப்புகளும், மதத்தடைகளும் நாட்டைச் சீரழித்த போது இசையைக் கொண்டுபோய் கோயில்களில் ஒளித்தார்கள். கடவுள் வழிபாட்டோடு அதையும் இணைத்துவிட்டால் அதைத் தீண்டுவது கடினம். கோட்டையைத் தகர்த்தெறியும் பகைவன் கோயிலைத்தொட சற்றே பின் வாங்குவான். ஆதிகாலம் தொட்டே இந்தியாவில் மட்டுமன்றி, ஐரோப்பிய நாடுகளிலும் இசை,மத வழிபாட்டுஇடங்களில்தான் வளர்ந்துவந்திருக்கிறதென்பது உண்மையாயினும், இசைக்கு இடர் நேர்ந்த காலையில் தென்னிந்திய ஆலயங்கள் அதற்கு

(4ம் பக்கம் பார்க்க)

# நெஞ்சம் மறவா நினைவு

(3ம் பக்கத் தொடர்ச்சி)

போது மன ஆறுதலையும் மனத்தென்பையும் அருளி வந்ததை என்னுல் ஒருபோதும் மறக்கவியலாது. அவர்கள் என்னிடம் காட்டிய அன்பை என்ன என்பது.

கணவரின் ஆண்டுத்திதியின் பின்னர் ஒரு நாள் முதன்முதலாக சுவாமிகளிடமே செல்லவேண்டுமென நினைத்து, அவர்களிடம் சென்றேன். அன்று அவர்கள் என்னை எதிர்பார்த்திருப்பதுபோலவே தனிமையாகக் கட்டிலில் இருந்த வண்ணம், வாசலைப்பார்த்தபடியே இருந்தார்கள். அவர்களை வணங்கிவிட்டு, நின்றபடியே அழுதேன் அதற்கு அவர்கள் ‘‘அப்படி இரு’ என ஒரு இடத்தைச்சுட்டிக்காட்டி, ‘‘அழாதே. ஏன் அழுகிருய்? அவன் ஓர்இடமும் போகவில்லை. இங்குதான் இருக்கிருன். இந்த அறையைவிட்டு அடுத்த அறையில் இருக்கிருன். நீ அழாதே. அவனுடைய காரியமெல்லாம் வடிவாக நடக்கும். நீ ஒன்றுக்குக் கவலைப்படாதே, ஆறுதலாயிரு" எனச்சொல்லி என்னை அனுப்பிஞர்கள்.

ஒரு சமயம் சுவாமி அவர்கள் எனது இல்லத்திற்கு வந்தார்கள். நடக்கமுடியாதபடியால் காரில் இருந்தபடியே என்னை அழைப்பித்துப்பார்த்து, ‘‘நீ சுகமாக இருக்கிருயா? பென்ஷன் வரத்தொடங்கிவிட்டதா? உனக்கொரு குறையுமில்லை; ஏதோ கஞ்சியோ கூழோ குடித்துவிட்டு மேலே பார்த்துக்கொண்டு இரு. எனக்கு நடக்க ஏலாது. இல்லாவிடில் நான் உள்ளுக்கு வந்துவிடுவேன், கடவுளைக் கும்பிட்டுக்கொண்டு இரு எனச் சொல்லிவிட்டுச் சென்ருர். என்னே, சுவாமிகளின் அன்பு. அன்பே உருவானதோர் அவதாரம்.

இன்னுமொருமுறை யான் சுவாமிகளிடம் சென்ற சமயம் மன ஆறுதலுடனும் மனச்சாந்தியுடனும் சென்றிருந்தேன். உடனே அவர்கள் என்னைப்பார்த்ததும் ‘‘என்ன, நீ இப்போ சந்தோஷமாயிருக்கிருயா? நீ எப்போதும் நித்தியானந்தமாயிரு; உனக்கு ஒரு குறையுமில்லை; உன்னை ஒருத்தராலும் அசைக்கமுடியாது" எனக்கூறிஞர். இன்னும் ஒருமுறை ஆச்சிரமத்துக்குப் போயிருந்தபொழுது எனக்குச்சமஸ்கிருதம் தெரியுமோ எனக்கேட்டார். அதற்கு யான் ‘‘ஸ்ரீராமோதஸ்தம் வரைக்கும் படித்திருந்தேன். இப்போது எல்லாம் மறந்துவிட்டேன்' என்றேன் அதற்கு அவர்கள்‘‘அதை நீதிரும்பப் படி. எல்லாம் வந்துவிடும்’ என்று சொல்லித் தைத்திரியோபனிஷத்தையும் படிக்கும்படி ஆக்ஞாயித்தார்.

கடைசியாகச் சுவாமியவர்கள் சமாதியடைவதற்கு மூன்று அல்லது நான்கு வாரங்களுக்குமுன்னுக இருக்கலாமென நினைக்கிறேன், அடுத்தடுத்து இரண்டுவாரங்கள் ஆச்சிரமத்திற்குச் சென்றேன். அவர்களை இனி இத்தோற்றத்திற் காணமுடியாதென்றதாலோ என்னவோ, ஒரு நாளுமில்லாத வகையில் மனமுந்த ஆச்சிரமத்திற்குச்சென்றேன், இரண்டாவது முறை சென்றதும் சிறிது கோபித்துக்கொண்டார். ‘‘ஏன் சும்மா சும்மா வருவான்; நான் தானே நினைத்தவுடனே அங்கு வருவேனே? ஏன் வருவான்" எனக் கடிந்துகொண்டார். அதுவே சுவாமிகளைத்தரிசித்த கடைசித் தரிசனமாகும்.

நித்தனே நிமலா போற்றி
நினைப்பவர் மனத்தோய் போற்றி
சுத்தனே யோகா போற்றி
சுயம்பிரகாசா போற்றி
சித்தனே சிவமே போற்றி
சின்மயானந்தா போற்றி
அத்தனே அரனே போற்றி
அருட்குரு மணியே போற்றி.

(யோகானந்த நவரத்தின மாலை)

ஓம் சாந்தி, சாந்தி, சாந்தி.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சிறுவர் பூங்கா

## சிநேகிதிகள்

— பொற்கோவன்

அது இரண்டாம் தவணைப் பரீட்சை. எஸ். எஸ். ஸி. மாணவ மாணவிகள் பரீட்சை எழுதிக்கொண்டிருந்தார்கள். எல்லாரையுமே ஜாக்கிரதையாகக் கண்காணித்துக் கொண்டிருந்த ஆசிரியரின் மீன்கொத்திக் கண்கள் சிறிதே ஓய்வெடுத்துக் கொள்ள ஆரம்பித்தன. அப்போது —

அதற்காகவே காத்திருந்தவள் போல சுகிலா முன்வாங்கிலிருந்த ராஜினியைத் தன் அடிமட்டையால் மெதுவாகத் தட்டினாள், ராஜினி பயத்துடனேயே திரும்பிப் பார்த்தாள். உடனே சுகிலா ஐந்தாவது கேள்விக்குப் பதிலைக்காட்டும்படி சைகை செய்தாள். உடலெல்லாம் நடுங்கிக் கொண்டிருந்த ராஜினி பதிலே கூருமல் திரும்பிக் கொண்டாள்.

சுகிலாவுக்கு ஆத்திரம் ஆத்திரமாக வந்தது. வேதனை வேறு! ஏனெனில் ராஜினியும்சுகிலாவும் இணைபிரியாத தோழிகள். இவர்களின் நெருங்கிய தோழமையைக் கண்டு ஆசிரியர்களும் ஆசிரியைகளும் பெருமைப் பட்டார்கள். இப்படியாகத் தனக்குக் கிடைத்த தனது ஒரே சகி ராஜினியே தனக்கு காட்ட மாட்டேனென்கின்ருளே என நினைத்தாள் அவள். ''இவ்வளவு தானு இவளது நட்பு?' என சுகிலாவின் மனம் குமைந்தது.

இதே வேளையில் ராஜினியின் மனமும் கூட துன்பம் மிகக் கொண்டது. அவள் நினைத்தாள்; சிகிலா என்னுடைய ஒரே-இணைபிரியாத-தோழிதான். அதற்காக இந்தத் தவறைச் செய்வதா? அவளுக்கு விடையைக்காட்டினல் அது அவளுக்கு உதவுவதாகாது-அவளுக்குச் செய்யும் துரோகமாகவே முடியும். இதே சுகிலா தானே என்னிடமே எத்தனையோ முறை பார்த்தெழுதுவது தவறு; அதைவிட பார்த்தெழுதத் துணைசெய்வது தப்பு என்றெல்லாம் கூறியிருக்கின்ருள். அப்படியிருக்க இப்போது...? நான் அவளின் சிநேகிதி என்பதனுலல்லவா கேட்கிருள்...

மீண்டும் ஒரு தடவை சுகிலா தன்னுடைய 'புட்ருலரால் ராஜினியைக் குத்தி அதை அவளிடமே கொடுத்தாள். ராஜினி அதைக் கேட்கவில்லையே, ஏன் அதை அவளிடம் தருகிருள்.

ராஜினி 'புட்ருலரை வாங்கினுள். அதில் '5-வது விடையைக்காட்டு' என்றெழுதியிருப்பது. உடனே அதன்மறுபக்கத்தில் ராஜினி எழுதிக் கொடுத்தாள். 'மன்னிக்கவும்! தெரிந்ததை எழுது' என்று.

பரீட்சை எழுதி முடிந்துவிட்டது. அனைவரும் வெளியேறினுர்கள். அப்போது தன் தோளை அன்புடன் பற்றிய ராஜினியைத் திரும்பிப் பார்த்தாள் சுகிலா. சுகிலாவின் விழிகளே பேசின:- 'நீ என்னுடன் இனி பேசவேண்டியதில்லை.'

"சுகி கோபித்துக்கொண்டாயா? இறைவனுக்குச் சமனை எழுத்தறிவிக்கும் நம் ஆசிரியர்களை ஏமாற்றுவது தவறு மாத்திர மல்ல பாபமே கூட என்று நீ தானே சுகி கூறுவாய், நானும் காட்டியிருந்தால் இது உனக்குச் செய்யும் தீங்கு அல்லவா? உனக்கு மாத்திரமல்ல உன்னுடைய கல்விக்கும் எதிர்காலத்திற்குமே செய்கின்ற தீமையல்லவா...?"

போதும் ராஜினி! என்னவோ அளக்கின்ருயே. நான் அதிக 'மார்க்ஸ்' எடுத்து விடுவேன் என்றுதானே ..."

''சுகி! உண்மையாக நான் அப்படிநினைக்கவேயில்லை..."

''போதுமடி நடிப்பு போதும், ஒரே கேள்வி தானேநானும் கேட்டேன்... இதோடு எல்லாம் முடிந்தது... இதன் பிறகும் சுகிலா நிற்கவில்லை. அவள் போய்விட்டாள்! போயே விட்டாள்!

''ஐயோ நான் என்ன தான் சுகிலாவுக்குக்காட்டாமலிருந்தேன். இனி என்னேடு அவள் பேசவரமாட்டாளே! -ராஜினியின் நெஞ்சினடியிலிருந்து பிறந்தஆழமான அவர்களின் நட்பின் ஏக்கம் இப்படி வார்த்தைகளாகப் பிறந்தன.

நாட்கள் விரைந்துவறைந்தன.

ஃ ஃ ஃ

அரசாங்கப் பரீட்சையின் முதலாம்நாள், இன்னமும் இருபதே நிமிடங்கள்தானிருக்கின்றன, 8-30 அடித்து பரீட்சையாரம்பிக்க.

சுகிலா கலவரத்தோடு அங்குமிங்கும் ஓடிக்கொண்டிருக்கிருள். தன் சுகி துன்பப்படுவதை ராஜினியால் அதிகநேரம்சகித்துக்கொண்டிருக்க முடியவில்லை. அவளிடம் சென்ருள்.

''சுகி என்ன நடந்தது... ஏன் பதற்றம்...?

''எனக்கெது நடந்தாலும் உனக்கென்னவாம்?' என்று சொல்லிவிட நினைத்தாள் சுகிலா. ஆனுல் நெடுநாட்கள் பேசாதிருந்த தன் மாஜித் தோழியைப்பார்த்து இப்படிக்கூற அவளால் இயலவில்லை. ஏனே முடியவில்லை.

ராஜினி ராணியிடம் சென்று விசாரித்தபோது தான் சுகிலா பேனுவைத் தொலைத்துவிட்டதை அறிய முடிந்தது. ஓடிச்சென்ற ராஜினி எங்கோ விரைந்து சென்றுகொண்டிருந்த சுகிலாவின் கரத்தைப்பற்றி நிறுத்தினுள். சுகிலா; இதோ பேனு! நான்கொடுப்பதாக நினைக்காதே! யாரோ தந்ததாக நினைத்துக்கொள் அமைதியாகப் பரீட்சை எழுது —'

''இது .. ''

"என்னுடையதுதான் இந்தா பிடி! வேண்டாமென்று சொன்னுல் நான் பரீட்சையே எழுதமாட்டேன்...

சுகிலாவினுல் என்ன செய்வதென்றே தெரியவில்லை. கண்கள் ஆனந்தக் கண்ணீர் பெருக்கின. இமைகள் படபடத்தன, பற்கள் ஒன்ருேடொன்று உரசின. சொற்களே பிறக்கவில்லை. எப்படி நன்றி கூறுவது என்றே விளங்கவில்லை அவளுக்கு.

"வாங்கிக்கொள் சுகி!"

---

ரவி: ராஜி, புதிய ஐம்பது சத நாணயத்துக்கும், புதிய ஒரு ரூபாய் நாணயத்துக்கும் என்ன வித்தியாசம்?

ராஜி: இது தெரியாதா? ஐம்பது சதம் வித்தியாசம்!

அனுப்பியவர்:
சபா புஷ்பகாந்தன்
சுன்னுகம்.

---

''ரா.,.ஜி! ராஜி! தேங்யு.. வெரிமச் ராஜி... ரா...ஜி! உனக்கு...!"

''இருக்கிறது சுகி!"

''பொய்யா சொல்கிருய்? எங்கே பார்ப்போம்...' என்று. சுகிலா பழைய உரிமையோடு ராஜினியின் கையிலிருந்த 'ஹேன்பேக்கை எடுத்து அதைத்திறந்தாள். உடனே...

அதற்குள்ளிருந்த வேறொரு பேனுவை எடுத்த ராஜினி ''எனக்கில்லை என்ருநினைத்தாய்?'' என்ருள் சுகிலாவைப் பார்த்துச் சிரித்தபடி.

பிரிந்தவர் கூடினல்:...? இருவரும் பூரித்த நெஞ்சங்களுடன் தத்தமதுமேசைகளை நோக்கி நடந்தனர்.

சுகிலா சிநேகிதியின் பெருந்தன்மையை -அன்பை எண்ணியெண்ணி மகிழ்ந்தாள். என்ன நடந்தாலும் ராஜி என்னுடைய தோழி தான்.,, நான் திட்டியதைக் கூட மறந்துவிட்டாள்,...! அன்று ராஜியின் மனம் எப்படியெல்லாம் புண்பட்டதோ...? - சுமதி தன்னிடம் இரண்டு பேனைகளை வைத்துக்கொண்டே 'ஒன்று சிவப்பு மைப்பேனு' என்று பொய் சொன்னுளெ! என்னுடனேயே சுற்றித் திரிந்தாளே நிர்மலா, அவள் கூட இரண்டுபேனைகளிருந்தும் ஒன்று தரவில்லையே, எழுதிக்கொண்டிருக்கும் போது பேனைக்கு ஏதும் நடந்துவிட்டால் பிறகு திண்டாடவேண்டியிருக்கும் தான். எல்லாம் போலி நட்குத்தானே! என்ன இருந்தாலும் ராஜினி ராஜினி தான்...!'

பரீட்சை எழுதி முடிந்து விட்டது,

சுகிலா ஓட்டாடி வந்தாள் ராஜினியிடம். அவள் வந்ததும் வராததுமாகச் கேட்டாள்; ''ராஜி! எழுதிக்கொண்டிருக்கும்போது தான் நினைவுவந்தது .,.... எனக்கு நல்ல பேனையைக் கொடுத்துவிட்டு நீ 'மை' கசியும் பேனையை வைத்துக்கொண்டாயோ என்று... எங்கே பார்ப்போம்.,,...." என்று கூறுக்கொண்டே ராஜினியிமிருந்த மற்றப் பேனையைப் பிடுங்கித்திறந்தாள் சுகிலா.

அது...!

சுகிலாவின் கண்கள் நிலைகுத்தி நிற்கின்றன. வேதனையால் துடிக்கும் இமைகளுக்குள்ளிருந்த அந்தக் கண்கள் கண்ணீரைப் பீறிடச் செய்தன. அது உஷ்ணமான வேதனைக் கண்ணீர்! நாக்கோ தடுமாறியது.

'''ரா—ஜி! ராஜி...! இது.. இது..."—கண்ணீர் வார்த்தைகளை அழித்தது.

''ஆமாம் சுகி! நிப் இல்லைத்தான். இதற்கு ஒருபுதிய நிப் வாங்கித்தான் போடவேண்டும் என்றுதான் ஏன்றுவந்திருந்தேன்...'

ராஜி! அந்படியானுல் நீ பரீட்சையே எழுதவில்லையா...? -சுகிலாவுக்கு வாய்விட்டு அழவேண்டும்போலிருந்தது, இதைக் கேட்கும் போது.

''ஏனடி அழுகிருய்? நான் எழுதினேன். —ராஜினிதன்னுடைய பென்சிலைக்காட்டினுள்.

"ஆ! ராஜி, ஏன் ராஜி இதை முன்னரே சொல்லவில்லை...? பென்சிலால் பரீட்சை எழுதக் கூடாதல்லவா...? மையினுலல்லவா எஸ. எஸ். ஸி. பரீட்சைக்கு எழுதவேண்டும்...! அந்தப் பரீட்சையில் நீ காட்டவில்லையானுலும், அதற்கு எழுதிய சரி பாதி மார்க்குகளென்ருலும் கிடைத்தது. ஆனுல் உனக்கு;"

''பார்த்தாயா, உனக்குப் பாதிப்புள்ளிகள்கிடைத்தே, எப்படி? நாம் கற்றதிலிருந்துதானே கேள்விகள் வரும். நீ தெரியாதென்று என்னைக்காட்டச் சொல்லிவிட்டுப் பின்னர் எழுதியதற்கு அரைப்பங்கு மார்க் கிடைத்தது எப்படியோ அப்படியேதான் கடவுளின் அருள் இருந்தால் எனக்கும் இந்தப் பாடத்திற்கும் புள்ளிகள் கிடைக்கும்,."

சுகிலா ராஜினியை அன்பு மேலீட்டால் அப்படியே கட்டிக்கொண்டாள். இன்பக் கண்ணீர் நிறைந்த அவ்ளின் விழிகளுக்கு தங்களிடம் இரண்டிரண்டு பேனைகளும் வைத்துக்கொண்டு தராத அந்தத் ''தோழி"கள் போவது தெரியவில்லை. அந்த மாசற்ற விழிகளுக்கூடாக ஆழமால பரிசுத்த இதயங்களின் பிரிக்க முடியாத அன்பின் தூய்மை பளிச்சிட்டது!

சரஸ்வதிதேவி அவர்களை மறக்கவில்லை. எஸ். எஸ். ஸி.யில் இருவரும் சித்தியடைந்தார்கள். ஆமாம்! தமன்சிலால் எழுதியதற்கும் புள்ளிகள் தரப்பட்டிருந்தன.

---

மனிதனைவிட தவளைகள் தான் அதிகதூரம் தாண்டக் கூடியவை. தவளைகள் பதின்மூன்றடி ஐந்து அங்குல தூரத்தை ஒரே தாவில் தாவிவிடும். ஆனுல் மனிதனே பன்னிரண்டடி ஒன்றரை அங்குலந்தான் இதுவரை அதிகமாகத் தாண்டிய தூரம்.

— க. சீவகாருண்யம்

---

## வானத்தாமரை (7ம் பக்கத் தொடர்ச்சி)

அவன்மனம்அளவுக்கு மீறிய ஆனந்தத்தாற் துள்ளியது. அப்படியே கண்களைமூடியவாறு தன்னை மறந்த நிலையில் மோனத்தவத்தில் ஆழ்ந்தான்,

இயற்கை நங்கை மெல்ல அசைந்தாடி அவன் முன் வருகிருள். அவளைத், தன் கண்களை அகலத்திறந்து பார்க்கிருன். ஆனுல் முற்ருகக் காணமுடியவில்லை. ஒரு கணம் காளிதேவி எப்படி ஆயிரங்கண்கள் பெற்ருள் என ஆராய்கிருன். அடுத்த கணம் அவன் அறிவு அவனைத்தட்டிஎழுப்பியது. ஒவ்வொரு அங்கமாகக் காண்கிருன். மலை, மடு, அருவி, கடல் இப்படி எத்தனை எத்தனையோ அவன் கண்களில் தோன்றுகின்றன. அவைகளைக்கண்டு மனதில் எழும் எண்ணங்களைக் கவிதைகளாக வடிக்கிருன். கல்பகோடி ஆண்டுகள் கவிதை பாடுகிருன். அந்த இயற்கைத் தாயை முழுமையாகத்தன் கவிதையம்பால், வேட்டையாட ஆசைப்படுகிருன். தோல்வி! ஒரே தோல்வி! ஆனுல் சலிக்கவில்லை. முயற்சிக்கு முற்றுப் புள்ளிவைக்கவில்லை. காலங்கள் மாறுகின்றன. உலகம் அழிகிறது. உளம் எழுகிறது. அவன் அசையவில்லை. பாடிக்கொண்டேயிருக்கிருன்.

அந்த மௌனத்தவ நிலையில் எத்தனை நேரம் இருந்தான் என்று அவனுக்கே தெரியவில்லை, மெல்லக்கண்களைத் திறந்து பார்த்தான், இன்னும்இருள் சூழவில்லை. எழுந்து வீட்டை நோக்கி நடக்க ஆரம்பித்தான். அந்தப் பரிபூரண பக்குவநிலையில் தான் தவழ்ந்த உலகத்தை ஒருமுறை நினைத்துப்பார்த்தான். அவன் உடம்பு புல்லரித்தது.

உண்ணவேண்டும், உடுக்க வேண்டும் என்ற அவசியம் மட்டும் இல்லாமலிருந்தால், அந்தப் பள்ளத்தாக்குகளிலே அவன் பர்ணசாலை அமைத்துக்கொண்டு, இயற்கைத்தாயுடன் இல்லறம் நடத்த ஆரம்பித்துவிடுவான். ஆனுல் என்ன செய்வது? இய்ற்கையைப் படைத்த அதே இறைவன் அதைப்பார்த்துப் பார்த்து இரசிப்பதற்குக் காலத்தைப் போதுமானமளவு கொடுக்கவில்லையே.

எண்ணத் தடாகத்திலே, மூழ்கி மூழ்கி இன்பம் அனுபவித்துக்கொண்டிருந்த சிவலிங்கம் ''கலகல வென்றகால் வளையங்களின் ஒலி கேட்கவே திரும்பிப்பார்த்தான். எந்தப்பெண் அவன் தேயிலைச் செடிக்கிடையே தேடிக்கொண்டிருந்தானே அந்தப் பெண் கர்ணகடூரவேகத்தில் அருகிலிருந்த செங்குத்தான குன்றொன்றில் ஏறிக்கொண்டிருந்தாள்.

அவள் சென்றவேகத்தையும் அந்தக் குன்றின் சரிவையும் பார்த்தபொழுது அவனுக்கே பயத்தினுல் நெஞ்சு திக்குற்றது. எப்படியாவது அவளை ஏருமற் தடுக்க வேண்டும் போலிருந்தது.

''ஏ பெண்ணே! அவன் குரல் தொண்டைக்குள்ளேயே கட்டுப்பட்டுவிட்டது. மீண்டும் பலம் கொண்டமட்டும் கூவினுன்.

நடந்தவாறே திரும்பிப் பார்த்த அவள், அங்கிருந்தேயொருமுறை கைகொட்டிக்'கலகல வெனச்சிரித்தாள், அவள் மீண்டும் அவன் அழைப்பைக்கேலி செய்துவிட்டுஏறியபொழுது வேகம் இருமடங்காக மாறியது.

கண மண் தெரியாத வேகத்தில் சென்றுகொண்டிருந்த அவள் ஸ்திரமற்ற கல்லொன்றிற் கால் வைக்கவே, நிலைதடுமாறி ',ஆ..." என்ற அலறலுடன் அந்த மலைச்சரிவில் உருண்டு கொண்டிருந்தாள்.

அந்தப்பயங்கரக் காட்சியைக் காணச்சகிக்காத சிவலிங்கம், தன் கண்களை இரு கைகளாலும் பொத்திக் கொண்டான்.

(தொடரும்)

---

## கண்ணனுக்கும் கொடுப்பனே!

—குமார் குணபால்—

வட்ட வட்ட வெண்ணிலா
வானில் ஊர்ந்து வருகுதே
எட்டி எட்டிப் பிடிககவே
எழுந்து நின்று துள்ளுறேன்.

மொட்டு மொட்டாய். மல்லிகை
மூக்கைத் துளைக்க மணக்குதே
பட்டுப் போன்ற கைகளால
பறித்து முகரப் பார்க்கிறேன்!

சிட்டுக் குருவி கீச்சென
சிறகை விரித்துப் பறக்குதே!
சுட்டிப் பையன் நானடா
சுற்றிச் சுற்றி ஓடுறேன்!

கட்டுக் கட்டாய் கரும்புகள்
கட்டிக் கீழே கிடக்குதே
கடித்துச் சுவைத்து தின்பனே
கண்ணனுக்கும் கொடுப்பனே!

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## குறுநாவல்

— 2 —

# வானத்தாமரை

— நா. யோகேந்திரநாதன் —

மஞ்சள் நிற ஆதவன் மலைக்குப் பின்னால் மறைவதையும், அந்நேரம் அந்தச்சுற்றுடலின்தேங்கி வழியும் அழகையும் காண்பதற்காக சிவலிங்கம் மாலைப்பொழுதை மிக ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அவன் ஆசைகளை உணராத இயற்கைத்தாய் பனிமூட்டத்தை அனுப்பி விட்டிருந்தாள். சுற்றிவர ஒரே புகைமண்டலமாக, பக்கத்து வீட்டைக் கூடத் தெளிவாகப்பார்க்க முடியாமலிருந்தது அவனுக்குப் பெரிய ஏமாற்றத்தையளித்தது.

ஏதாவது கவிதையாவது எழுதலாம் என்ற எண்ணத்துடன் மேசை மேலிருந்த பேப்பரையும் பென்சிலையும் எடுத்துக்கொண்டு போய் யன்னலருகே கதிரையைப் போட்டுவிட்டு அமர்ந்தான்.

சந்திரமதிக்கோ அவனைப் பார்த்த நேரம் தொட்டு அவனைத் திரும்பப்பார்க்க வேண்டும்; ஏதாவது பேசவேண்டுமென்ற எண்ணங்கள் எழுந்து சுடர்விட்டு எரிந்து கொண்டிருந்தன. ஆனால் அச்சுடரின் ஒளி அவள் இதயத்திற்குள்பரவி தைரியத்தைத் தட்டி எழுப்ப முன்னமே நாண இருள் தோன்றிச் சுடரின் ஒளியை மங்க வைத்தது. ஏதாவதொரு காரணம் கற்பித்துக்கொண்டு அவனுடைய அறைக்குச் செல்ல வேண்டும் என எதிர்பார்த்துக் கொண்டிருந்த அவளுக்கு மாலைத்தேநீர் ஓர் அரிய வாய்ப்பைத் தேடித் தந்தது.

நன்றாகக் கனிந்த இரண்டு மாம்பழங்களை அறுத்து ஒருதட்டில் அழகாக அடுக்கி வைத்தாள். ஒரு கையிற் தேநீரும் மறுகையிற் அந்தத் தட்டுமாக மெல்ல மாடிப்படி ஏறினாள்.

அறையின் பக்கத்தில் வந்து ஒரு கணம் தாமதித்து நின்றாள். அவளது மூச்சைத் தவிர அந்த இடத்தில் பரிபூரண அமைதி குடிகொண்டிருந்தது, அந்தக் சூழ்நிலை அவள் நெஞ்சில் ஏதோ ஒரு தவிப்பை ஏற்படுத்தித் திரும்பஓடிவிட வேண்டும் என்ற எண்ணத்தை உண்டுபடுத்தியது. ஆனாலும் கையில் இருந்த தேநீரை நினைவு படுத்திக் கொண்டு மெல்லக் கதவைத் திறந்தாள்.

பரந்து கிடந்த பனி மூட்டைத்திடையே பார்வையைச் செலுத்திக்கொண்டிருந்த சிவலிங்கம் கையிற் பேப்பரை வைத்துக் கொண்டு பென்சிலின் அடிப்பாகத்தை வர்ய் நுனியிற் தட்டியவாறு அழகாகச் சாய்ந்திருந்தான். அவன் சுருண்ட கேசமும், எதையோ ஆராய்ச்சி நடத்திக்கொண்டிருந்த அவனுடைய கண்களும் அவள் நெஞ்சுக்குள் புகுந்து கிளறிவிட்ட உணர்ச்சிகள் அவள் வாழ்நாளில் முதல் முதலாக அனுபவிப்பதாகவே உணர்ந்துகொண்டாள். ஆனால் அந்த உணர்வுகளின் தன்மை என்னவென்று அவளாற் புரிந்து கொள்ள முடியவில்லை.

நெஞ்சு படபட என்று அடித்துக்கொண்டது. தன் வருகையைத் தெரிவிக்க மெல்லத் தொண்டையைக் கனைத்தாள்.

கவிதைத் தாயின் கரத்திலிருந்து விடுபட்டவனாகக் கழுத்தை அவள் பக்கம் திருப்பினான் சிவலிங்கம், 'ஓ! வணக்கம் வாருங்கள்.

அவள் மனதைச் சுற்றி நாணப் புழுதி படிந்து கொண்டாலும் அவன் அழைப்பின் கலகலத்த தன்மையினால் அது அரைகுறையாக அகற்றப்பட்டு குனிந்த தலைநிமிராது நடந்து வந்தாள்.

சிவலிங்கம் எத்தனையோ பெண்களைச் சந்தித்திருக்கிறான், ஆனால் அவர்கள் யாவரையும் விடச் சந்திரமதி ஏதோ ஒரு விதத்தில் உயர்ந்தவளாகவே தோன்றினாள். அவள்மெல்ல மெல்ல நிலத்திற் தன் பார்வையைப் பதித்து நடந்து அவனருகில் அமைதியாகத் தேநீரையும், பழத்தட்டையும் வைத்துவிட்டு மருண்ட அவள் விழிகளாலே ஒரு முறை அவனைப்பார்த்துவிட்டுத் தலையைக் குனிந்து கொண்டாள்.

''சந்திரா! இவையெல்லாம் எனக்காக நீங்கள் தயாரித்தவையா?'

ஆமாம் என்று சந்திரமதி செல்லாவிட்டாலும், அவள் புன்னகை பூத்துவிட்டுத் தலையைக் குனிந்த விதம், ஆமோதிப்பதாக அமைந்திருந்தது.

வழக்கமாகப் பெண்களுடன் பேசுதென்றாலே, சிவலிங்கத்துக்கு ஒரு பெரிய கஷ்டமான காரியம். ஆனால் அவர்கள் பார்க்காத வேளைகளில் அவர்களின் ஒவ்வொரு அசைவையும் பார்த்துப் பார்த்துப் கவிதை பாடியிருக்கிறான். இன்று அவன் நிலைமை மிகவும் தர்மசங்கடமாக இருந்தது. தன்னருகில் வந்து, அமைதி கலந்த அழகுடன், நாணத்தின் வடிவமாக நின்று கொண்டிருக்கும் ஒருபெண்ணிடம்கதைப்பதற்கு அவனுக்குமே வெட்கமாகத் தான் இருந்தது. ஆனாலும்தான் ஒரு ஆண்பிள்ளையென்பதை நினைவில் நிறுத்தி, அவளிடம் என்ன கதைக்கலாம் என்பதைப் பற்றிச் சிந்திக்கத் தொடங்கினான்.

தான் அருகில் நிற்பதையும் பொருட்படுத்தாது, எதையோ சிந்தித்துக் கொண்டிருந்த சிவலிங்கத்தின் மேல் அவளுக்கு ஆத்திரமாக வந்தது. ஆனாலும் அதைக் காட்டிக்கொள்ளாமல் மெல்ல அங்கிருந்து போவதற்கு அடியெடுத்தாள்.

எத்தனை யெத்தனையோவெல்லாம் அவளிடம்கேட்க வேண்டும், சொல்லவேண்டும் என்று தீவிரமாக வரிசைப் படுத்திக் கொண்டிருந்த வேளையில், அவள் அவ்விடத்தை விட்டு நகர்ந்தது பெரிய ஏமாற்றமாக இருந்தது. ஆனாலும் அவளைத் தடுத்து நிறுத்திப் பேசுவதற்கு அவனுக்குத் தைரியம் வரவில்லை.

எங்கே தன்னை அழைக்க மாட்டானோ என்ற ஏக்கத்துடன் அவ்விடத்தைவிட்டு நகர்ந்த அவளுக்கு, அவனின் அமைதி பெரிய ஏமாற்றத்தையளித்தது. சோர்வடைந்த எண்ணங்களுடன் படிக்கட்டுகளிற் காலைவைத்தாள்.

அவள் உருவம் தெரிந்த இடத்தில் சலனமற்றகுளிர் காற்று அசைந்தாடிய பொழுதுதான், அவளை இன்னும் சிறிதுநேரம் அங்கேயே நிறுத்தி வைத்திருக்கலாம் என்று தோன்றியது. என்றாலும், அவளுடைய அந்த மென்மையான நடையையும், அமைதியான தன்மையையும் பார்த்து இரசிக்க வேண்டும் என்ற ஆவல் அவன் நெஞ்சத்தின் வெளிவாயில் விளிம்புவரை நின்று ஆடியது. மெல்ல எழுந்து வாசற் கதவிற் தோளைச் சாய்த்தவாறே, கைகளை முன்னாற் கட்டிக் கொண்டு கீழே நோக்கினான்.

அமைதியாக கூடத்தில் நடந்துகொண்டு சென்று அந்த அறையையாவது ஒருமுறை மனங்குளிரப் பார்க்க வேண்டுமென்று சந்திராவின் மனதில் தோன்றியது. மெல்லத் திரும்பிப் பார்த்த போதுதான் சிவலிங்கம் தன்னைக் கண்கொட்டாதுபார்த்துக் கொண்டிருப்பதை அவளால் உணரமுடிந்தது.

இருவர் கண்களும் ஒரு கணநேரம் குத்திட்டு நின்றன. அடுத்த கணம் அலைபாய்ந்து அப்பாற் கிடந்த பொருட்களிலெல்லாம் விழுந்து படாதபாடுபட்டன. அப்பொழுது இருவருமே தங்கள் செய்கைகளுக்காக தங்களை நொந்து கொண்டனர். வெட்கத்தால் உடல் குறுகியவனாக அறையினுட் புகுந்தான் சிவலிங்கம். ஹோலைக்கடந்து ஓடிச் சென்று மறைந்தாள் சந்திரமதி.

தன் குட்டு உடைந்துவிட்டதால் சந்திரா தன்னைப் பற்றி என்ன நினைப்பாளோ என்ற எண்ணம், அவனைப் பெரும் குழப்பத்துக்குள் ஆழ்த்தியது. ஏதாவதுவேறு காரணங்களைச் சொல்லித் தன்னைப் பற்றித் தவறான எண்ணம் எழாமல் தடுக்க வேண்டும் போலிருந்தது. அவனுக்கு அறைக்குள்இருப்புக் கொள்ளவில்லை. மெல்லப்படிகளில் இறங்கி ஹோலை அடைந்தான். சொல்லி வைத்தாற்போல் சந்திராவும் அந்த நேரத்திலா அங்கு நுழைய வேண்டும்? தர்மசங்கடமான அந்த நிலையில் தான் தத்தளிப்பதை அவள் அறியாமலிருப்பதற்காக அவளைப் பார்த்து ஒருமுறை அசட்டுத்தனமாகச் சிரித்தான்.

பதிலுக்கு அவளும் சிரித்துவிட்டு ''அமருங்கள்'', என்றாள் அமைதியாக.

கதிரையில் அமர்ந்து கொண்டே, சிவலிங்கம் சந்திராவின் கையிற் காட்சியளித்த புத்தகத்தை நோக்கினான்.

அவன் எண்ணத்தைப் புரிந்துகொண்டவள் போல், ''இது காண்டேகரின் புத்தகம் வேண்டுமானால் படித்துப் பாருங்கள், என்று கூறிவிட்டு அவனிடம் நீட்டினாள்.

அந்தப் புத்தகத்தை வாங்கியவாறே அவன் கேட்டான், ''ஏது நீங்கள் பெரிய இலக்கிய ரசிகை போலிருக்கிறதே."

மெல்லச் சிரித்துவிட்டு அவள் கூறினாள், ''மனதைத் தூய்மைப்படுத்தும் இலக்கியங்களை நான் பெரிதும் விரும்புகிறேன். இலக்கியம் வாழ்வின் தாய்மையான பக்கங்களைத் தழுவிச் செல்லும் பொழுதுதான் படிப்பவர்களைப் பைத்தியமாக்கிறது. தன்னிட்மே ஒன்றவைக்கும் திறமை கொண்ட அந்த இலக்கியங்களைப் பொறுத்தவர்ர நான் ரசிகையேதான்,'

ஆழங்காண முடியாத கடல் அமைதியாக இருக்கும் என்கிறார்கள். சிவலிங்கத்தைப் பொறுத்தவரையில் சந்திரா-இழையோடும் அந்த அமைதிக்குப் பின்னால் இவ்வளவு ஆழமான அறிவு இருக்கும் என்று எதிர்பார்க்கவேயில்லை. கண்ணுக்கெட்டாத தூரத்துக்கெல்லாம் பரந்துகிடக்கும் அறிவுப் பெருங்கடலாகவே அவள் தோன்றினாள்.

அதுவும்தான் எத்தனையோ முறை தன் எழுத்துக்களில் வலியுறுத்திய உண்மையை இன்று சந்திராவின் வாயினாற் கேட்கும் பொழுது அவனுக்கே மிகவும் பெருமையாக இருந்தது. தான் சிருஷ்டிக்கும் அந்த இலக்கியங்களை மனமார ரசிக்கும் ஒரு ரசிகையைக் கண்டுபிடித்துவிட்டதில் அவனுக்கு மகிழ்ச்சி பிடிபடவேயில்லை; என்றாலும் அவனுக்குத் தன் இலக்கியங்களை எவ்வளவுதூரம் இரசித்திருக்கிறாள் என்றறியும் ஆவல் முன்னணியில் நின்றது.

''நீங்கள் சிவாவின் இலக்கிய சிருஷ்டியைப் பற்றி என்ன நினைக்கிறீர்கள்?

ஓ! அவரின் 'மஞ்சள் வெய்யில் தான் பிரசித்தி பெற்ற கவிதைத்தொகுதியாயிற்றே!"

சிவலிங்கம் ஆவலுடன் கேட்ட விதமும். அவன் பார்வை, பேச்சு முதலியவற்றிற் தெரிந்த தெளிவு, அவன் தான் கவிஞன் சிவாவாக இருக்கவேண்டும் என்ற எண்ணத்தை எழுப்பியது. தன் சந்தேகத்தை நிவர்த்தி செய்யும் முயற்சியில் ஈடுபட ஆரம்பிக்கலானாள். ''ஏது நீங்கள் கேட்பதைப் பார்க்கும் போது, சிவாவே நேரில் வந்து கேட்பது போலல்லவா இருக்கிறது!

''அதற்குள் ஒரு 'போல்' வரவேண்டிய அவசியமேயில்லையே!"

''என்ன?'

''அந்தச்சிவா நானேதான்!

சந்திராவுக்குத் தன்னையே நம்பமுடியவில்லை. ஒரு பெரிய கவிஞனுடன் தான் உரையாடிக் கொண்டிருக்கிறேன் என்று நினைக்கும் பொழுது, தன்னையும் தன்னைச் சுற்றியுள்ள சூழலையும் அவளால் நம்பமுடியவில்லை.

ஆனந்தச் சுமையைத் தாங்கமுடியாத அவள், அதைத் தன் தந்தையிடம் கொடுத்துச் சிறிது பங்கிடலாம் என்ற எண்ணத்தில் புலவர் அருணசலத்தைத்தேடி ஓடினாள்.

அவள் ஆனந்தமடைந்த பொழுது பட்டபாட்டையும், துள்ளிய துள்ளலையும் கூட, ஓர் அமைதிப் போர்வைக்குள்ளாகவே அவனால் காணமுடிந்தது. அந்தத்தனித்தன்மையின் ரகசியத்தைப் ''புரிந்துகொள்ள முடியாதவனாக, மெல்ல ஒருமுறை உலவிவிட்டு வருவதற்காக வெளியே கிளம்பினான்.

புகைமண்டிக்கிடப்பதைப் போல், ஊரையே தன்னுடலாய் மறைத்து வேடிக்கை புரிந்து கொண்டிருந்த பனிப் படலம் சிறிது விலகியிருந்தது. சின்னஞ்சிறு குன்றுகளும், புனல்களும் சிறிது சிறிதாக அவன் கண்களில் தென்பட ஆரம்பித்தன.

தூரத்தே தெரிந்த அருவியை நாடி நடந்துசென்றான். நடுவிலே ஒருபாறை, அதைச் சுற்றி நீர் ஓடிக் கொண்டிருந்தது. அப்பாறைக்குச்செல்வதற்கென வழியமைத்தாற் போல், சின்னஞ்சிறு கற்கள் காணப்பட்டன. அதைப் பார்த்த போதே அதன் நடுவே போய் அமர்ந்திருந்து தன்னைச்சுற்றிப்யோடும் புனல் நீரில், பேராதனை அழகையெல்லாம் பிம்பமாகக் காண வேண்டும் என்று தோன்றியது.

அந்தக் கல்லிற் போய் நின்று சுற்றிவரப் பார்த்தான், நீருக்குட்பார்த்தான். நீண்டு வளர்த்திருந்த இரப்பர் மரங்களும், அதன் உச்சியில் ஒலியெழுப்பிக்கொண்டிருந்த வண்ணச்சிட்டுகளும், தலைகீழாகத் தெரிந்தன. வேறு ஒருவர் பார்த்தால் தானும் கூட, அந்த அழகுச் சின்னங்களுடன் சேர்ந்து காணப்படுவான் என்று நினைக்கும் பொழுது

(6-ம் பக்கம் பார்க்க)

அழுக்கணவனையும்—புழுக்களையும் அழிப்பதற்கு
BAYER
மெற்றசிஸ்ரொக்ஸ் உடன் - டிப்ரெறெக்ஸ்
METASYSTOX DIPTEREX
மேலே குறிக்கப்பட்டுள்ள மருந்தை விநியோகஞ் செய்ய
விநியோகஸ்தர்கள் இல்லாத கிராமங்களிலிருந்து விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.
PHONE 397 JAFFNA ROYAL DISPENSARY T' GRAMS ROYAEL

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## ஞாயிறு கதை மலர்

# கடைசியாக ஒரு முறை

கருணா தலையணையில் முகத்தைப் புதைத்து விம்மிக்கொண்டிருந்தாள். பொங்கிவரும் கண்ணீருக்கு அணைபோட அவளால் முடியவில்லை. அகமே அழுது கொண்டிருக்கும்போது முகத்தில் முத்துமுத்தாக நீர் பெருகத்தானே செய்யும். அதை எப்படித் தடுப்பது?

கருணா செல்வமகள்தான். அவள் கண்ணில் நீர்வடிந்தால் பெற்றோரின் உள்ளத்தில் உதிரம்கொட்டும். அவளது ஆசைக்கு அவர்கள் அணைபோட்டது கிடையாது. அவளுக்கு இரு சகோதரர்களிருந்தனர். சகோதரர்களுக்கும் அவள் அன்புச் சகோதரிதான். அன்பின் அணைப்பிலே வளர்ந்த அவள், விரும்பியதெல்லாவற்றையும் தடையின்றிப் பெற்று வந்த அவள் அன்று தாயின் சீற்றத்துக்காளாகிவிட்டாள். தந்தை கூட அவள் ஆவலுக்குத்தடை கூறிவிட்டார்.

வேறெதாவதற்கு அவர்கள் தடைபோட்டிருந்தால் அவள் பொறுத்திருப்பாள். ஆனால்தன் அருமைத்தோழி யமனுடன் போராடும் சமயத்தில் அவளைக்கண்டு கதைக்கத் தடைபோட்டு விட்டார்கள் அவர்கள். கருணாவின் ஆருயிர்த்தோழி கண்ணம்மா. அவர்களிடையே வேற்றுமையென்பதேயிருந்ததில்லை. இன்று கண்ணம்மா கொடிய விஷசுரத்திற்குள்ளாகி மரணவாயிலிலே நிற்கின்றாள். அவளைப்பார்த்துப் பேசக் கருணாவின் இதயம் கணத்துக்குக் கணம் துடித்தது. ஆனால் அவளைப்பார்க்கப் போகவே கூடாதெனத் தடுத்துவிட்டனர்பெற்றோர்

குமுறிக்குமுறி அழுத வண்ணம் கருணாஇருந்தாள். அவள் உடல் அங்கு இருந்தது. உள்ளமோ உயிர்த்தோழியிடம் சென்றுவிட்டது. கண்ணம்மா கருணாவின் உயிர்த்தோழி தான். கருணாவின் உள்ளத்தில் கடந்தகாலச் சம்பவங்களெல்லாம் இப்பொழுது கூடப் பசுமையாகப் பதிந்திருக்கின்றன.

அப்பொழுது கருணா கன்னிப் பெண்ணல்ல. பள்ளி செல்லும் பாலகி. அவள் மூன்றாம் வகுப்பிலிருந்து நான்காம் வகுப்பிற்குக் காலடி வைத்த அன்று பல சிறுவர் சிறுமிகள் புதிதாக வந்திருந்தனர். அவர்களில் கண்ணம்மாவும் ஒருத்தி. அவள் தேம்பியழுது கொண்டிருந்தாள். அவளிடம் சென்று கருணா மழலை மொழி கூறித் தேற்றினாள். அழைத்துச் சென்று பாடசாலையின் பலவிடங்களையும் காட்டினாள்.

முதல்நாளே தன்னிடம் அன்புகாட்டிய கருணாவுடன் கண்ணம்மா இணைந்துவிட்டாள். ஆனால் இருவரும் மலையும் மடுவும் போன்றவர்கள். கருணா செல்வத்தில் மிதப்பவள். கண்ணம்மாவோ வறுமையில் வாடுபவள்.

அந்தப் பிஞ்சு உள்ளங்கள் அந்த வேற்றுமையை உணரவில்லை. கண்ணம்மா ஒருநாளும் தன்னைப்போல் பட்டுச்சட்டை அணியாததைக்காணக் கருணாவுக்கு ஆச்சரியமாகவிருந்தது. அவளது கிழிந்த உடைகளைக் கண்டவள் கண்ணம்மாவும் தன்னைப்போல் பட்டுச்சட்டை அணிய வேண்டுமென்று ஆசை கொண்டாள்.

ஒருநாள் கருணா, கண்ணம்மாவிடம் "ஏன் கண்ணம்மா நீநல்ல சட்டை போடறதேயில்லை?" என்று கேட்டாள். இது அந்தப் பிஞ்சு உள்ளத்தின் வஞ்சனையற்ற வினா. "நல்ல சட்டை வாங்க எங்களிட்டக் காசில்லை" என்றாள் கண்ணம்மா. "ஏனில்லை?" உலகம் புரியாத கருணா இப்படிக் கேட்டாள். அதற்குக் கண்ணம்மாவிற்கும் பதில் கூறத் தெரியவில்லை. "அதுதான் தெரியேல்லை என்றாள்அவள் "என்மாதிரித்தானே கண்ணம்மாவுமிருக்கிறாள். 'ஏன் அவளுக்குமட்டும் சட்டை வாங்கக் காசில்லை. நாமெல்லோரும் ஒரேமாதிரி மனிதர்கள்தானே' என்று எண்ணிட்டாள் கருணா. அந்தச் சிறுமி கண்ட ஒற்றுமையை 'பெரிய மனிதர்கள்" காணாததுதான் அதன் காரணமென்பது அவளுக்குத்தெரியவில்லை. மறுநாளே தனது சட்டையொன்றை எடுத்து வந்து கருணா கண்ணம்மாவிடம் கொடுத்தாள்.

கருணாவீட்டில் செய்யப்படும் பட்சணங்களை கண்ணம்மா ருசி பார்த்தால்தான் கருணாவுக்குத்திருப்தியேற்படும். கண்ணம்மா வீட்டிலிருக்கும் மாங்காய், விளாங்காய் என்பனவற்றை கருணா ருசித்தாலே கண்ணம்மா உறங்குவாள். சின்னஞ்சிறு வயதிலேயே அவர்கள் உற்ற சிநேகிதிகளாகிவிட்டனர்.

காலம் உருண்டது. சிறுமிகளும் வளர்ந்தனர். படிப்புடன் நட்பும் வளர்ந்தது. அம்மா அடித்ததைப் பற்றியும் அப்பா வாங்கிவந்த பொருளைப்பற்றியும் அண்ணன் செய்த குறும்புகளைப்பற்றியும் ஒருவருக்கொருவர் பேசி மகிழ்ந்தவர்கள். இப்பொழுது வேறு என்னென்னவோ எல்லாம் பேசினர்.

கண்ணம்மா தன்குடும்பத்தின் வறுமையைப்பற்றிக் கூறுவாள். வறுமையின் காரணமாகத் தன் இல்லத்தினர் அடையும் இன்னல்களைச் சொல்லிச் சொல்லிக் கவலை கொள்வாள். கருணா அவளுக்குஆறுதலும் தேறுதலும் கூறுவாள். தேவையான சமயங்களிற் தன் சேமிப்பிலிருந்து பெற்றோருக்குத் தெரிந்தும் தெரியாமலும் கண்ணமாவுக்குப் பணம் கொடுப்பாள்,

பாடசாலையில் இருவரும் இணைபிரியாது இருப்பார்கள், ஒன்றாகவே படிப்பார்கள். ஒன்றாகவே உண்பார்கள். இருவரும் ஒருவராகவே இணைந்துவிட்டனர். ஒரு நாளைக்குக் கண்ணம்மா வராவிடில் கருணா துடிப்பாள். கருணா வராவிடல் கண்ணம்மா பதறிப் போவாள்.

ஒருமுறை பாடசாலையில் உல்லாசப் பிரயாணம் ஒன்று ஏற்பாடுசெய்திருந்தார்கள். கண்ணம்மா அதிற்கலந்து கொள்ளமுடியாத நிலையிலிருந்தாள். அவளது அன்னை நோயுற்றிருந்ததால் தாயை தனியே விட்டு வரக் கண்ணம்மா விரும்பவில்லை. சுற்றுப்பிரயாணத்தில் கலந்து கொள்ள ஆயத்தங்கள் செய்திருந்தகருணாவும்போக மறுத்துவிட்டாள், கண்ணம்மா என்னென்னவோ கூறிப் பார்த்தாள்.

"கருணா, இத்தகைய ஒரு சந்தர்ப்பம் மீண்டும் கிடைக்காது. நீ போய்விட்டு வந்து பார்த்தவற்றைக் கூறினாலே நான் பார்த்ததுபோலிருக்கும். சந்தர்ப்பத்தைத் தவறவிடாமல் போய்விட்டுவா" என்றாள் கண்ணம்மா. "உனக்குக் கிடைக்காத சந்தர்ப்பம் எனக்கு வேண்டாம் கண்ணம்மா. நீ இல்லாத போது நான் எதைப்பார்த்தாலும் பார்த்ததுபோலிருக்காது." இது கருணாவின் பதில். "உல்லாசப்பிரயாணமென்றால் எவ்வளவு சந்தோஷமாக..." என்று ஆரம்பித்த கண்ணம்மாவை இடைமறித்து "நீ அனுபவிக்காத சந்தோஷம்எனக்கு வேண்டாம். நான் போனாலும் அது எனக்குத்துன்பமாகத்தான்இருக்கும்"என்று அந்தப் பேச்சுக்கே கருணா முற்றுப்புள்ளி வைத்துவிட்டாள். என்தோழி அனுபவித்தால் போதும். அது நான் அனுபவித்ததுக்குச் சரி என்றெண்ணினாள் கண்ணம்மா. என் தோழிஅனுபவிக்காததுஎனக்கெதற்கு?" என்றெண்ணினாள் கருணா. அத்தகைய அன்பு அவர்களுடையது.

— [illegible]ராணி'

"பணக்காரப் பெண்ணாயிருந்தும் நீ இவ்வளவு கர்வமற்றபெண்ணாயிருக்கிறாயே. ஆனால் நம்மிருவரது நட்பும் பாடசாலை வாழ்க்கை முடிந்த பின்பும் தொடருமா என்ற சந்தேகமாயிருக்கிறது" என்று கண்ணம்மா பலமுறை கூறியிருக்கிறாள்.

அவளது எண்ணம் உண்மையாகிவிட்டது, எஸ். எஸ். ஸி.யுடன் கண்ணம்மாவின் கல்விக்கு முற்றுப்புள்ளி வைக்கப்பட்டது. கருணாவின் கல்வி தொடர்ந்தது, கண்ணம்மா பாடசாலைக்கு வராதுவிட்டபின் கருணா அடிக்கடி அவளது வீட்டிற்குச் சென்று வருவாள்.


மூன்று மாதம் இப்படிக் கழிந்தது. அதன்பின் திடீரென்று கண்ணம்மாவின் வீட்டிற்குப் போகக்கூடாதெனக் கருணாவின் பெற்றோர் தடைவிதித்தனர். கருணா பல நாட்களாக அல்ல பல வருடங்களாகக் காத்துவந்த இரகசியம் பெற்றோர்களுக்கு எப்படியோ தெரிந்துவிட்டது. அதன்பலன் கண்ணம்மாவின் வீட்டிற்குப்போகக் கூடாதெனக் கடும்தடையுத்தரவு போடப்பட்டது.

கருணா போகாமலிருப்பது எப்படி? கெஞ்சினாள். மிஞ்சி வாதாடினாள். எஞ்சியது பெற்றோரின் கோபமே, எதுவுமே செய்ய முடியாத நிலையில் பெற்றோரின் கட்டளைக்குக்கீழ்ப்படிந்தாள். ஆனால் அவர்களிடையே கடிதத் தொடர்பு இருந்து வந்தது.

பார்த்தால் பேசினால்தான் அன்பு இருக்கும், வளருமென்று கூறிவிடமுடியாது. அன்பு இருப்பதால்தான் அந்த அன்பு பார்த்துப்பேசவேண்டுமென்னும் உணர்ச்சியை எழுப்புகின்றதே தவிர பார்க்காவிட்டாலும் பேசாவிட்டாலும் உண்மை அன்பு அழியமுடியாது. அதுபோல் கண்ணம்மாவினதும் கருணாவினதும்அன்பு வளர்ந்ததேயொழியக் குறைந்துவிடவில்லை. ஆனால் இருவரும் ஒருவரையொருவர் காணத்துடித்தனர். தோழிகளிடையே ஆயிரமாயிரம் விஷயங்கள் கதைப்பதற்கிருக்கும். நாட்கணக்கில் பேசவேண்டிய விஷயங்களைக் கடிதத்தில் வடித்துவிடமுடியுமா? உயிர்த்தோழிகள் ஒருவரையொருவர் பார்க்காமலிருந்தால் அவர்கள் உள்ளம் என்னபாடுபடும்? அவர்களுக்கோ சந்திக்கும் சந்தர்ப்பம் கிட்டவில்லை.

ஒரு நாள் கண்ணம்மாவிடமிருந்து கடிதம் வந்தது. அதில் தனக்குக் காய்ச்சல் கண்டிருப்பதாக அவள் எழுதியிருந்தாள். அந்தக் கணமே ஓடிச் சென்று கண்ணம்மாவைப் பார்த்துவர

(2ம் பக்கம் பார்க்க)

விவேகமுள்ள தாய்மார்,

தங்கள் குழந்தைகளின் சுகவளர்ச்சிக்கு

ஒஸ்டர்மில்க்கையே நம்புகிறார்கள்.

தாய் பால் ஊட்ட முடியாத தருணங்களிலோ அல்லது தாய்பால் போதாமற்போகும் வேளைகளிலோ நீங்கள் ஒஸ்டர்மில்க்கை பரிபூரணமாக நம்பமுடியும்.

தூய்மை மாறுத்தன்மையுடைய ஒஸ்டர்மில்க், ஆரோக்கியமளிக்கும் ஓர் பால் ஆகாரம். பச்சிளங் குழந்தையின் மென்மையான வயிற்றுக்கு பாதுகாப்பானது. இரும்புச்சத்தும், விட்டமின் Dயும் உள்ளிட்டு அமைக்கப்பட்ட ஒஸ்டர்மில்க், குழந்தையை திடகாத்திரமாகவும், ஆரோக்கியமாகவும், வளரச்செய்கிறது.

நாளொரு மேனியும், பொழுதொரு வண்ணமாக குழந்தைகள் வளர்ந்து செழிக்க ஒஸ்டர்மில்க்.




ஒஸ்டர்மில்க்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வரி விளம்பரம்

### தேவை

கைத்தறி நெசவு ஆசிரியை; நெசவுப்பயிற்சித் தராதரப் பத்திரமும் ஐந்து வருட அனுபவமும் பெற்றிருத்தல் வேண்டும். கைத்தறி நெசவாளர் இப்பதவிக்குப் பெண்களும் ஆண்களும் விண்ணப்பிக்கலாம். இருவருட அனுபவம் பெற்றிருத்தல் வேண்டும். பெண்களுக்குத் தங்குவதற்கு இடவசதியுண்டு. அனுபவத்திற்கேற்ப சம்பளம் வழங்கப்படும். கீழ்க்காணும் விலாசத்திற்கு 29-4-65 தேதிக்கு முன் விண்ணப்பிக்கவேண்டும். வே. செல்லையா, அப்பிலானை, கோப்பாய்வடக்கு. கோப்பாய். 65

### தேவை

புகழ்பெற்றஎமதுஇலங்கா தயாரிப்புகளை வீட்டுக்கு வீடு விற்பனை செய்வதற்கு விற்பனைப்பெண்களும், ஓடர்கள் எடுப்பதற்கு அனுபவம் மிக்க பிரதிநிதிகளும் தேவை. தகுந்த வேதனம் வழங்கப்படும். விண்ணப்பிக்கவும்; மனேஜர், இலங்கா லபோறற்றறீஸ், உடுவில், சுன்னுகம். 78

### விற்பனைக்கு

மின்சார, குழாய்த் தண்ணீர் வசதியுள்ள 6 அறைகளைக்கொண்ட நல்ல ஒரு வீடும் அத்துடன் சேர்ந்த இரண்டரைப்பரப்புக் காணியும் ஆஸ்பத்திரி வீதியில் விற்பனைக்குண்டு. விபரங்களுக்கு 476 இலக்கம், ஆஸ்பத்திரிவீதி, யாழ்ப்பாணம். 83

### சிங்களவகுப்பு

சிங்கள எஸ். எஸ். ஸி. சித்தியடைந்த ஆசிரியையால் சிங்களம் கற்பிக்கப்படும். வகுப்பு நேரம் பகல் 1 மணி தொடக்கம் மாலை 7மணிவரை. 1 மணித்தியாலப்படிப்பு. மாணவருக்கு வசதிப்படி. மாதம் ரூபா 10/-. சரஸ்வதி வித்தியாலயம், 247, பருத்தித்துறை வீதி, சங்கிலித்தோப்பு, நல்லூர். 84

சிறுபிள்ளைகள் பாடசாலை (Nursery School) 3-5-65 திங்கட்கிழமை காலை 9 மணிக்கு ஆரம்பிக்கப்படும். காலை 8 மணி தொடக்கம் பதிவுசெய்யப்படும். சேரும்போது ரூபா 10/- கட்டவேண்டும். பின்னுல் மாதாமாதம் ரூபா 6/-கட்டவேண்டும். ஒரு குடும்பத்தில் ஒரு பிள்ளைக்குக்கூடச்சேர்ந்தால் மூதல் கட்டுப் பணம் ஒருவருக்கு ரூபா 7-50 சதமாகும். சரஸ்வதி வித்தியாலயம், 247, பருத்தித்துறை வீதி, சங்கிலித்தோப்பு, நல்லூர். 85

**தொய்வு, கசம், நீரிழிவு,** வெள்ளை முதலிய பல கொடிய வியாதிகள் குணப்படுத்திய விபரங்கள் அடங்கிய கற்றலோக் இனும். மந்திரிமார் மற்றும் பிரமுகர்கள் எம்மிடம் சிகிச்சை பெற்று வியந்துள்ளனர். வைத்தியர் பரிபூரணானந்த. கைலாசபிள்ளையார் கோவிலடி, யாழ்ப்பாணம்.

REGAL – JAFFNA
NOW SHOWING
Anthony perkins
Melina Mercourie
in
PHAEDRA

## சிறுகதை
### (2 ம் பக்கத் தொடர்ச்சி)

"கருணு, என்ன வாய்வரவர நீளுது. நான் இருக்கு மட்டும் நீ அங்கை போக முடியாது. என்னை மானத்தோடு வாழவிடு' என்றுள் தாய். "நாங்கள் சாதிபேதம் பாராட்டுவதுதான் அவமானம்மா. இதனுல், மானம் போகாது."

"கருணு நீ போக முடியாது. பேசாமலிரு.

"அம்மா, கொஞ்சம் இரக்கம் காட்டுங்களம்மா. ஒரேயொருமுறை பார்த்துவிட்டு வந்துவிடுகின்றேனம்மா.'

"முடியாது என்றுல் முடியாது. முடியவே முடியாது.

"கருணு என்ன சண்டை அது" என்று கேட்டபடி வந்தார் தந்தை.

"அப்பா, கண்ணம்மாவுக்கு வருத்தமாம் அப்பா. இறுதியாக ஒருமுறை பார்த்துவிட்டு வரப்போகிறேன் அப்பா. ஆவலுடன் தந்தையின் அருகில் சென்று கருணு கேட்டாள். தாயிரங்கவில்லை. தந்தையின் கருணையாவது கிடைக்குமென்ற நப்பாசை அவளுக்கு. அவளது ஆவலைத் தவிடுபொடியாக்குவது போல் "அங்கெல்லாம் நீ போகக் கூடாது கருணு. என்று தந்தை கூறினுர். "அப்பா, நீங்களுமா இப்படிச் சொல்கின்றீர்கள்? இப்பொழுது பார்க்காவிட்டால் என் வாழ்நாள் முழுவதுமே என்னுருயிர்த் தோழியைப் பார்க்கமுடியாதே அப்பா. மனமிரங்குங்களப்பா. அன்பைப் பற்றி, நட்பைப்பற்றி உங்களுக்குத் தெரியாதா?

"சீ, அவளைத் தோழியென்று சொல்லாதே" தந்தை சீறினுர்.

"ஏன், சொன்னுலென்னப்பா? அதிலென்ன தவறிருக்கின்றது?

"அவள் என்ன சாதியென்று தெரியுமோ?"

"சாதி! சாதி!! சாதி!!! அந்த வியாதி எப்போ தீருமப்பா?'

"சீ! அதிகப் பிரசங்கித்தனமாகப் பேசாதே. தந்தையின் கோபம் உச்சக்கட்டத்தை அடைந்துவிட்டது. "அப்பா, அப்பா என்று எதுவோ கூற வாயெடுத்தாள் கருணு. தந்தையோ திரும்பிப்பார்க்காதுசென்றுவிட்டார். தாயின் பக்கம் திரும்பினுள். அங்கே அவளைக் காணவில்லை. ஏமாற்றத்துடன் ஓடிச்சென்று படுக்கையில் வீழ்ந்தாள்.

சம்பவங்கள் அனைத்தையும் அசை போட்டுக்கொண்டிருந்த கருணு சுய நினைவு பெற்றுள். அவளுக்கு என்னசெய்வதென்று தெரியவில்லை. சிந்தனை மேலும் ஓடியது. கண்ணீரும் ஆறுகப்பெருகியது,

'இப்பொழுது என்னசெய்வது? என் கண்ணம்மாவைப் பபர்க்கவே முடியாதா? ஐயோ! அவள் எப்படி நோயில் வாடுகின்றுளோ! கடவுளே! ஏன் இந்தச் சாதிப் பிரிவினை தோன்றியது? என் முகம் வாடியிருப்பதையே காணப் பொறுக்காத அம்மா இன்று நான் கதறிக்கண்ணீர் விட்டபோதும் கல்நெஞ்சுடையவளாக இருந்தாளே. என் விருப்பங்களை மறுப்பின்றி நிறைவேற்றும் அப்பாகூடத் தடை போட்டுவிட்டாரே. போதாததற்கு என்மேற் கோபமுமல்லவா கொண்டார்கள். அத்தனை தூரம்இந்தச் சாதிப் பைத்தியம் பொல்லாததா? என் அன்புத்தோழியை, என் உயிரோடு உயிராகிவிட்ட பிராண சிநேகிதியைக்கூட இறக்கும் தறுவாயிலிருக்கும் போது போய்ப்பார்க்க மறுப்புக்கூறுகிறுர்களே! இந்த உலகில் எம்மிருவரது அன்பிற்கும் மதிப்பிருக்காதா? இத்தகைய அன்பிற்கு இவ்வுலகில் இடம் இல்லையா? வேற்றுமைக்குத் தான் இங்கு இடமுண்டா?

தெய்வமே! இந்தச்சாதிப் பிரிவினை தீராதா? நான் கண்ணம்மாவைக் காணவியலாதா?

'கண்ணம்மா இறந்துவிட்டால்? ஐயோ அப்படி எண்ணவே என்னுலியலவில்லையே. அதன் பின் அவளைப் பார்க்கவே முடியாது. அவளுடன் பேசமுடியாது. கடிதம்கூட எழுதுமுடியாது, எதுவுமே செய்யமுடியாது. ஏன், அவளை மீண்டும் இவ்வுலகில் பெறவேமுடியாது.

'இறைவா! மனிதர்கள்தான் எம்மைப் பிரிக்கிறுர்களென்றுல் நீயுமா எம்மைப்பிரிக்கப் பார்க்கிறுய்? அத்தகைய இரக்கமற்றவனு நீ? ஒருவராக இணைந்துவிட்ட எம்மை ஒன்றுகவே இந்த உலகத்திலிருந்து கொண்டு சென்றுவிடு. எம்மைப்பிரிக்காதே'-இப்படி எண்ணமிட்டவண்ணமிருந்தவள் எழுந்தாள்.

தூக்கமாத்திரைப் போத்தலை எடுத்துவந்தாள். 'கண்ணம்மா! இதோ நானும் உன்னைத்தொடர்ந்து வருகின்றேன். சாதிப்பேய் எம்மிருவரையும் கொல்லட்டும். அது இல்லாத மறு உலகில் நாம் ஒன்றுசேர்வோம். தோழிகளாக மாறுவோம், ஆனுல் நாம்சேருவோம் என்பது நிச்சயமா? கண்ணம்மா, இப்பொழுது உன்னைப்போல் நானும் மரணத்தின் வாயிலில் நின்று இறுதியாக ஒரே ஒருமுறை உன்னைப்பார்க்கத் துடிக்கிறேனடி, அதை உணர்வோர் எவருமில்லை. இப்படி எண்ணியபடி தன் முடிவைச்செயலாக்குகிறுள்.

மதிய உணவுக்காகக் கருணுவை அழைக்கவந்தாள் அன்னை. அங்கு கருணுவின் உயிரற்ற உடல் கிடந்தது. தன் மகள் உலகிலிருந்து பிரிந்ததை அறிந்த அன்னை அலறினுள்.

கருணு தன் இறுதி யாத்திரையை மேற்கொண்டிருந்தாள். எதிரே ஒரு பிரேத ஊர்வலம் வந்துகொண்டிருந்தது. அது நெருங்கிய போது கண்ணம்மாவின் தந்தை முன்னே வருவது தெரிந்தது. ஆம்! கண்ணம்மாவும் தனது இறுதி யாத்திரையைத் தொடங்கியிருந்தாள். இறுதியாக ஒரே ஒரு முறை" காணத்துடித்த அவ்விவரும் இறுதியாக ஒரே ஒரு முறை கண்டு [illegible]

(யாவும் கற்பனை)




## இசைப்புலவர்
### திரு. சி. செல்லத்துரை

இசைப்புலவர் திரு. சி. செல்லத்துரை ஒரு சங்கீத வித்துவான் மாத்திரமன்றி ஆசிரியரும் கவிஞருமாவர். சுவையான செந்தமிழ்க் கவிதைகளை ஆக்கும் திறனை குருகவிமகாலிங்கசிவம் அவர்களிடம் இளமையிலேயே பயின்றவர். பண்டிதமணி திரு. சி. கணபதிப்பிள்ளை பண்டிதர் எஸ். இராசையனுர் அவர்களிடமும் இலக்கிய இலக்கணங்களைக் கற்றுத் தேறியவர். இவரது கவிதைகளும் இசைப் பாடல்களும் இலங்கை வானெலியில் பலமுறை ஒலிபரப்பப்பெற்றன. இசைக்கலையில் ஆர்வமுடைய இவர் ஆரம்ப இசைக்கலையை திரு. எம். எஸ். பரம் அவர்களிடம் பயின்றுர். திரு. பரம் அவர்களின் அன்புக்குப் பாத்திரமான இவர் அவரின் ஆதரவுடன் வேனிற்கால சங்கீத வகுப்புக்களில் பயின்று சங்கீத கலாநிதி திரு. ரி. எஸ். சபேசையர் சங்கீதகலாநிதி தஞ்சாவூர் கே. பொன்னையா பிள்ளை அவர்களின் பாராட்டையும் பெற்றுர். ஈழத்து வயலின் சக்கரவர்த்தியான புத்துவாட்டி திரு. என். சோமசுந்தரம் அவர்களிடம் பலகாலம் இசை பயின்று வட இலங்கைச் சங்கீத சபைப் பரீட்சைகளையும் பூர்த்திபண்ணியுள்ளார்.




இவரது சாரீரவளத்தையும் லயப்பிடிப்பையும், குருபக்தியையும் வெகுவாக விரும்பிய வயலின் சக்கரவர்த்தி இவர் மீது அன்பு வைத்து ஆவலுடன் இசையமுதை ஊட்டிவந்தார். யாழ்ப்பாணம் மணிக்கூட்டு வீதியிலுள்ள சன்மார்க்க போதன ஆங்கிலவித்தியாசாலையில் ஆசிரியராகப்பணி புரிந்துவருகின்றுர். பொருள் உணர்ச்சியுடன் அனுபவித்துப் பாடும் திறன் நிறைய உடையவர். அனைவருடனும் நன்றுகப் பழகும்பண்புடையவர். இவரது இசைத் திறனைப் பாராட்டி கொடிகாமம் தேன் தமிழ் மன்றம் அகில இலங்கை சங்கீத ஆசிரியர் சங்கம், உரும்பராய் சிதம்பர சுப்பிரமணிய தேவஸ்தானம் முறையே இசைக்குரிசில், சங்கீதகலாமணி, திருமுறை இசைமணி என்னும் கௌரவப் பட்டங்களை வழங்கியுள்ளன.

சமீபத்தில் இந்தியா சென்றபோது சிதம்பரத்திலே ஸ்ரீ நடராசர் முன்னிலையில் ஒரு தரம் பாடியது கேட்ட தீட்சிதர்கள் பல முறை பாடுவித்துப் பரிசில் வழங்கினர். சிதம்பர தேவஸ்தான வித்துவான் திரு. எம். கனகசபைப்பிள்ளையுடன் திருமுறைபாடி அவரின் பாராட்டையும் பெற்றுர்.

யாழ்ப்பாண ரஸிகரஞ்சன சபா ஆரம்பித்தநாள் முதல் இச்சபாவின் உபதலைவராக இருந்து சபாவின் முன்னேற்றத்துக்கு உழைத்துவருகின்றுர். யாழ் பிரதேச கலாமன்றம், அகில இலங்கைச் சங்கீத வித்வசபை, தென்மராட்சி முத்தமிழ்கலைமன்றம் (காரியதரிசி) வட இலங்கைச் சங்கீதசபை (உபகாரியதரிசி) களிலும் அங்கம் வகித்து பணியாற்றி வருகின்றுர்.

இவரது கலைத்திறனையும் கலைப்பணியையும் கௌரவிக்கும் நோக்கமாக (இன்று 25-4-65ல்) இவருக்குப் பொன்னுடை போர்த்த ஏற்பாடாகியிருக்கிறது.

கிங்ஸ்லி (கொழும்பு) பிளாஸா (வெள்ளவத்தை) ராஜ் (நீர்கொழும்பு)
நவா (கும்பனித்தெரு) விஜயா (மட்டக்களப்பு) மொடர்ன் (பண்டாரவளை)
விஜிதா (ஹட்டன்) தீவொளி (நுவரெலியா) ஜுபிட்டர் (குருநாகல்)
வெலிங்டன் (யாழ்ப்பாணம்)
தினசரி மாலை 6-30, 9-30



எம். ஜி. ராமச்சந்திரன்
சாவித்திரி
மற்றும் பலர் நடித்த
வேட்டைக்காரன்

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# இலங்கையின் வெங்காயத் தேவையை யாழ்ப்பாணம் பூர்த்தி செய்ய வேண்டும்

## சமாஜ திறப்பு விழாவில் அரசாங்க அதிபர் கோரிக்கை

சுழிபுரம், சனி

சிக்கனம் தான் எமக்குத் தேவை. ஆடம்பரமான விழாக்களுக்குச்செலவு செய்யும் பணத்தை மிச்சப்படுத்தி சிறு அபிவிருத்தித் திட்டங்களில் முதலீடு செய்வதால் அதிக லாபத்தையும் நன்மையையும் அடையலாம் என்று யாழ்ப்பாணம் அரசாங்க அதிபர் திரு. நெவில் ஜயவீரா வலிகாமம் மேற்கு பல நோக்குக்கூட்டுறவுச் சங்க சமாஜ புதிய கட்டிடத் திறப்பு விழா வைபவத்தின்போது பேசுகையில் குறிப்பிட்டார். திறப்பு விழா வைபவத்துக்கு சமாஜத் தலைவர் அ. தே. வேதாபரணம் தலைமைவகித்தார். திரு. நெவில்ஜயவீராமேலும் பேசுகையில் கூறியதாவது:

வலிகாமம் மேற்கு பல நோக்குக் கூட்டுறவுச் சங்க சமாஜத்தினர் கல்லுண்டாயில் ஆரம்பிக்கப்பட்ட உப்பளத்தை என்னுல் பாராட்டாமல் இருக்கமுடியாது. ஒரு பெரும் வேலைத்திட்டத்தை உருவாக்கி முயற்சித்ததே வரவேற்கத்தக்கதாகும். உப்பளத்தின் முன்னேற்றம் ஏனைய சமாஜங்களுக்கு ஓர் முன்மாதிரியான செயலாகும். 4 கோடி ரூபா பெறுமதியான மிளகாயை, பம்பாய் வெங்காயத்தை நாம் இந்தியாவிலிருந்து இறக்குமதி செய்கின்றோம். இந்நிலையை மாற்றி அமைக்க வேண்டும். யாழ்ப்பாணத்து மக்கள் இன்று வேண்டிய வெங்காயத்தை உற்பத்தி செய்து தென் இலங்கைக்கு அனுப்புகின்றூர்கள். வேறு நாடுகளிலிருந்து எதிர்பார்க்காமல் யாழ்ப்பாணத்து மக்கள் இலங்கை பூராவும் தேவையான மிளகாய், வெங்காயம் போன்றவற்றை உற்பத்தி செய்து முன்னேற வேண்டும். குடிசைத் தொழில், கைத்தொழில் போன்றவற்றின் மூலம் நாம் முன்னேறவேண்டும். அதற்குப் பல நோக்கு சமாஜங்கள் முன்னின்றுஉழைக்க வேண்டும்.'

கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. எச். எஸ். வனசிங்க பேசுகையில் கிராமப்புற மக்கள் கூட்டுறவு இயக்கங்களுக்குக்கொடுத்துவரும் ஆதரவு மூலமே இன்று கூட்டுறவுஇயக்கம் வளர்ந்து வருகின்றது என்றும், கட்டிடங்களைக்கட்டி திறப்புவிழா நடத்திவிட்டால் மட்டும் போதாது; நல்ல பயன்படத்தக்க முறையில் காரியங்களைச்செய்யவேண்டும் என்றும், பொருளாதார வளத்தைப் பெருக்குவதும் நாட்டின் தேவைகளைக் குறைப்பதுமே இலட்சியமாகும் என்றும்கூறினுர்.

கூட்டுறவு ஆக்க உதவி ஆணையாளர் திரு. எஸ். சபாரத்தினமும் உரை நிகழ்த்தினுர்.

திரு. எச். எஸ். வனசிங்கா மேளவாத்தியத்துடன் ஊர்வலமாக அழைத்துவரப்பட்டார். வழிநெடுகிலும் பூரண கும்பங்கள் வைத்து மாலைகள் அணிவிக்கப்பட்டன. திரு. நெவில் ஜயவீரா கூட்டுறவுக் கொடியேற்றி வைத்தார். கூட்டுறவு ஆக்க ஆணையாளர் திரு. எச். எஸ். வனசிங்கா கட்டிடத்தைத் திறந்துவைத்தார்.

திரு. எச். எஸ். வனசிங்கா சித்தங்கேணி, பண்ணுகம் தெற்கு, மாதகல் ஆகிய பல நோக்குச்சங்கங்களுக்கும் சென்றுபார்வையிட்டார்.

### வாடகைக்கு

கொக்குவில் மூன்ரும் கட்டை பாலத்தடியின் அருகில் காங்கேசன்துறை வீதியில் சகல வசதிகளுடன் அமைக்கப்பட்ட வீடு வாடகைக்கு 1-5-65 தொடக்கம் உண்டு, விபரம்: மாலை 5 மணிக்குப்பின், சிவசுப்பிரமணியம். மூன்ரும்கட்டை பாலத்தடி, கொக்குவில். 91

### தேவை

எமது ஸ்தாபனத்திற்கு காஷியர் ஒருவர் தேவை. பிணைப்பணம் 1250/-சம்பளம் 100/.லிருந்து 125/- வரை கொடுக்கப்படும். பிணைப்பணம் கட்டக்கூடியவர்கள் நேரில் வரவும். லிங்கம்ஸ் எலற்றிக்கல், ஸ்ரான்லி வீதி, வெலிங்டன் சந்தி, யாழ்ப்பாணம். 88

### தேவை

மூளாய் ஆஸ்பத்திரியிலிருந்து மூன்று மைலுக்குள் நல்ல தண்ணீர் மற்றும் வசதிகளுடன் கூடிய வீடு தேவை. வாடகை மற்றும் விபரங்களுடன் எழுதவும். விளம்பரதாரர், கூட்டுறவு ஆஸ்பத்திரி மேற்பார்த்து, மூளாய். 89

### அச்சுக் கோர்ப்பவர் தேவை

அச்சுக் கோர்ப்பவர்கள் பதவிக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன. விண்ணப்பதாரர்கள் தங்களது கல்வித்தகைமை, இத்துறையிலுள்ள முன் அனுபவம் ஆகியவற்றுடன் தங்களது திறமை, முன்வேலை செய்த இடங்கள், கடைசியாகப் பெற்ற சம்பளம் ஆகியவிபரங்களுடன் வேலைசெய்த இடங்களிலிருந்து பெற்ற நற்சாட்சிப்பத்திரப் பிரதிகளையும் தங்களது விண்ணப்பத்துடன் இணைத்து அனுப்பவேண்டும். விண்ணப்ப முடிவுதிகதி 3-5-65. மனேஜர், ஈழநாடு லிமிட்டெட், யாழ்ப்பாணம். 90

### அறிவித்தல்

**அந்தியட்டி கிரிகை**

நீராவியடியைச் சேர்ந்த பிரபல புகையிலைத் தரகர் சின்னத்தம்பி நாகலிங்கம் அவர்களின் அந்தியட்டிக் கிரிகைகள் வருகிற திங்கட் கிழமை (26-4-65) காலையில் கீரிமலையில் நடைபெற இருப்பதால் அத்தருணம் உறவினர்களையும், நண்பர்களையும் அதில் பங்குகொள்ளும் வண்ணம் கேட்டுக்கொள்ளுகின்ரேம். இங்ஙனம், நாகலிங்கம் அவர்கள் பேரன், சி. பாலசுப்பிரமணியம் சகோதரர்கள். 29/4 கடைச்சாமி ஒழுங்கை, நீராவியடி, யாழ்ப்பாணம். 87

# சகலருக்கும் இலவச கல்வி வசதிகள்

## தூதரக அதிகாரி பேட்டி

யாழ்ப்பாணம், ஞாயிறு

''செக்கோஸ்லோவேகியா பொருளாதாரத் துறையில் தன்னிகர் பெற்றுவிளங்குகின்றது. இங்கு ஏராளமான கைத்தொழில்கள் உண்டு. வர்த்தக, பொருளாதாரத் துறைகளில் சிறந்து விளங்கும் எமது நாடு, 112-க்கும் அதிகமான நாடுகளுடன் வர்த்தகத்தொடர்புகொண்டிருக்கின்றது''என்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்த இலங்கை செக்கோஸ்லோவேகியா தூதரகத்தைச் சேர்ந்த திரு பிருண்டி செக்பெனுர், ''ஈழநாடு'' நிருபருக்கு அளித்த விசேஷ பேட்டியில் கூறினுர்.

செக்கோஸ்லோவேகியாவின் கல்விக் கொள்கைகள் குறித்து அவர் தெரிவிக்கையில், அங்கு எல்லோருக்கும் இலவசக்கல்வி அளிக்கப்படுகின்றது என்று கூறினுர்.

''பாடப்புத்தகங்கள் இலவசமாகவே வழங்கப்படுகின்றன. இதில் பாரபட்சம் எதுவும் காட்டப்படுவதில்லை. அங்கு, ஆறு வயதுக்கு மேற்பட்ட 15 வயதுக்குக் கீழ்ப்பட்ட சகலரும் பாடசாலைக்குச் செல்ல வேண்டும். இது கட்டாயப் படுத்தப்படுகின்றது, பல்கலைக்கழக தரமுடைய 51 கல்லூரிகள் இருக்கின்றன.'' என்றும் அவர் கூறினுர்.

''சமூக அடிப்படையில், 55 சதவிகித தொழிலாளர்களும், 27. 5 சதவிகித வேறு ஊழியர்களும், 11.8 சதவிகித கூட்டுறவாளர்களும், 3. 2 சதவிகித தனிப்பட்ட விவசாயிகளும் இருக்கின்றனர். நிலக்கரி உற்பத்தியில் நாடு முன்னேற்றமடைந்து வருகின்றது. 1961-ம்ஆண்டு ஒன்பதுகோடியே ஐம்பது லட்சம் தொன் நிலக்கரி உற்பத்திசெய்யப்பட்டது. அதே ஆண்டில் 31,000இயந்திரக் கருவிகளும், 28,000 டிராக்டர்களும், 13,000 லொறிகளும், 162,000 மோட்டார் சைக்கிள்களும் உற்பத்தி செய்யப்பட்டன. இதனுடன் ஒன்பது கோடியே எண்பது லட்சம் சோடி சப்பாத்துக்களும் பத்து லட்சம் தொன் சீனியும் உற்பத்தி செய்யப் பட்டிருக்கின்றது'' என்றும்அவர் குறிப்பிட்டார்

### விகடவிழா

யாழ்ப்பாணம், ஞாயிறு

கொழும்பு எஸ். வி. பொன்னம்பலம் அன்ட் சன்ஸ் ஸ்தாபனத்தினர் இன்று மாலை யாழ். நகர மண்டபத்தில் 'விகடவிழா' ஒன்று நடத்துகின்றனர். இவ்விழாவில் ''அசட்டு ராமு என்னும் நகைச்சுவை நாடகமும், யாழ்ப்பாண நாடக மன்றங்களின் பல கதம்ப நிகழ்ச்சிகளும்இடம் பெறுவதாக அறிவிக்கப்பட்டுள்ளது. விழாவுக்கு கட்டணம் எதுவுமில்லை.

யாழ்ப்பாணம், ஞாயிறு

அண்மையில் வண்ணை வைத்தீஸ்வரன் தேவஸ்தானத்தில் நடைபெற்றதேர்த் திருப்பணிமலர் வெளியீட்டு வைபவத்தை திரு. சி. எஸ், எஸ். மணிபாகவதர் ஆரம்பித்து வைத்தார். தேவஸ்தான காவலர் திரு. வை. கந்தப்பசெட்டியார் யாழ்ப்பாணம் கே. கே. எஸ். வீதியைச் சேர்ந்த வர்த்தகர் திரு. [illegible] மிருந்து [illegible] பெற்று முதல்மலரை கொடுத்தார்.

### 'சிவபூசை விளக்கம்' நூல் வெளியீட்டு விழா

திருக்கேதீச்சரம், சனி

திருக்கேதீச்சரம் குருகுல முகாமையாளரும் திருப்பணிச்சபைத்தலைவருமாகிய திரு. சேர் கந்தையா வைத்தியநாதன் தலைமையில் திருக்கேதீச்சர ஆலயவசந்த மண்டபத்தில் அச்சுவேலி சிவஸ்ரீ ச. குமாரசுவாமிக் குருக்கள் எழுதிய சிவ பூசை விளக்கம் என்னும் நூல்வெளியீட்டுவிழா நடைபெற்றது. தலைவர் தமது உரையில் கூறியதாவது:

'சிவபூசை விளக்கம் குருகுலத்தின் ஐந்தாவது வெளியீடாக வெளிவந்திருக்கிறது. 1961-ம் ஆண்டிலே அறிவும் விளக்கமும் இறையன்பும் நிறைந்த குருமார்களை உருவாக்குதற்கு திருக்கேதீச்சரத்தில் குருகுலம் தாபிக்கப்பட்டுநடைபெற்று வருகிறது. ஆறுமுக நாவலர் போன்ற சான்ரோர்கள் ஆற்றிய சேவைகளுக்கமைய இக்காலக் குருக்கள் பணியாற்றிவருகின்ருர். இப்பெரியார் சைவசமயக்கிரியைகளின் உண்மைகளை எடுத்துரைக்கும் வல்லமையும், ஞானமும் நிரம்பியவர்களாக நம்மத்தியில் விளங்குகின்ருர்.

யாழ்ப்பாணம் பரமேஸ்வராக் கல்லூரி அதிபர் திரு. சி. சிவபாதசுந்தரம் நூலின்முதற்பிரதியை வாங்கினுர். கொழும்பு விவேகானந்த சபைத்தலைவர் திரு. இரா. சபாநாயகமும் திரு. வே. க. சின்னையாவும் மற்றும் பலரும் இப்புத்தகப் பிரதிகளை வாங்கிக் கௌரவித்தனர்."

கண்டனூர் வித்துவான் சிவஸ்ரீ அரு. இராமநாதக் குருக்கள் விடுத்த ஆசிச் செய்தியில் ''சிவமணி திரு. சேர் கந்தையா வைத்தியநாதன் எவ்வித இன்னல்களையும் பாராட்டாது சிவதரும சிந்தனைபூண்டு பதி தருமமாகிய திருக்கேதீச்சரத்திருப்பணியிலும் திருநகரத்தபிவிருத்தியிலும்ஈடுபட்டவர்களாய்க் குருகுலம் ஒன்று உண்டாக்கி, அதன் மூலமாகச் சிவவித்தியாபிவிருத்தியும் சிவசாஸ்திரப் பிரசாரமும் செய்துவருகிருரென்றும், 'சிவபூசை விளக்கம்' இரண்டாவது பதிப்பு குருகுலத்தின்ஐந்தாவது வெளியீடாகவருகிறது; அது நமக்குக்கிடைப்பதற்கரிய நலனென்று சொல்ல வேண்டுவதில்லை எனவும் குறிப்பிட்டுள்ளார்.

### சிரமதானம்

உடுப்பிட்டி, சனி

புலோலி கிழக்கு அறுவாக்கிணற்றடி என்னுமிடத்தில் ஒடுக்கமான, போக்குவரத்திற்கு இடைஞ்சலாகவுள்ள ஒழுங்கைகளைத் திருத்துவதில் வடமராட்சிக் காரியாதிகாரி திரு. ஜே, டி. ஆர்னல்ட் தலைமையில் சுமார் 200 தொண்டர்கள் நேற்று சிரமதான இயக்கதிதிலீடுபட்டனர். வடமராட்சிப் பகுதிக்குட்பட்ட சில கிராமசேவகர்களும், நெல்லியடி, கரவெட்டி, புலோலி, கரணவாய் முதலிய இடங்களிலிருந்து வாலிபர்களும் வந்திருந்தனர்.

ஒழுங்கைகளை இருபக்கமும் அகலப்படுத்தும்வேலையில் அவ்வூர் மக்கள் தாராளமாகக் காணிகளை விட்டுக்கொடுத்ததுடன் தாமும் சிரமதான இயக்கத்தொண்டர்களுடன் சேர்ந்து வேலையிலீடுபட்டனர். தொடர்ந்து நடைபெற்றுவரும் இச்சிரமாதான இயக்க வேலைகள் இன்னும் சில நாட்களுக்கு நடைபெறவிருக்கின்றன. நேற்றைய வேலையில் அகில இலங்கை வேலை வேண்டுவோர் கழகமும், நெல்லியடி சனசமூக நிலையமும் முக்கிய பங்கெடுத்துக் கொண்டன.

### ரசிகரஞ்சன சபா இசைவிழா

**இன்றைய நிகழ்ச்சிகள்**

5-30—7-30 திரு. என். கே. பத்மநாதன் கோஷ்டியார்-மேளம், 7-30—8-00 திருமதி ஞானமணி செல்லையா, திருமதி விமலேஸ்வரி பத்மநாதன், செல்வி ரேணுகாதேவி சிவசம்பு-வீணை; திரு. டி, ஜெயசுந்தரம் - மிருதங்கம், 8-00—8-15 காரியதரிசி அறிக்கை, 8-15—8-30 தலைமையுரை திரு. எஸ். தணிகாசலம் (வடமாநில உதவி வித்தியாதிபதி), 8-30—8-45 இசைப்புலவர் திரு, ஸி. செல்லத்துரைக்கு பொன்னுடை போர்த்தல், 8-45—10-00 திரு. ஏ. எஸ். நாராயணன் பாட்டு, பிரமஸ்ரீ எஸ். சோமாஸ்கந்த சர்மா வயலின், திரு. ரி, பாக்கியநாதன் மிருதங்கம், 10-00—11-15 திரு. ஏ. ஜி. ஐயாக்கண்ணு தேசிகர்-பாட்டு, ஜி. சண்முகானந்தம்-வயலின், ஏ. எஸ். இராமநாதன் மிருதங்கம்.

### ஆஸ்பத்திரி ஊழியர் தற்கொலை

ஊர்காவற்றுறை, சனி

புங்குடுதீவு அரசினர் ஆஸ்பத்திரியில் கடந்த 33 ஆண்டுகளாக மருந்து கலக்கும் ஊழியராகக் கடமையாற்றிய சங்கரன் சபாரத்தினம் (வயது 55) என்பவர் நச்சுத்திராவகம் அருந்தி சென்ற புதன்கிழமை தமது இல்லத்தில் தற்கொலை செய்து கொண்டார்,

தீவுப்பகுதி மரண விசாரணை அதிகார் திரு. மா. முருகேசு ஸ்தலத்தில் விசாரணை நடத்தினுர்.

தற்கொலையுண்டவர் சில நாட்களாக மனம் உடைந்தவராகக் காணப்பட்டார் என விசாரணையின்போது கூறப்பட்டது,

### பரிசு பெற்றவர்களுக்கு பாராட்டு

யாழ்ப்பாணம், ஞாயிறு

யாழ்ப்பாணம் திறந்த வெளிஅரங்கில் நடைபெற்ற தேசிய தின விளையாட்டுப் போட்டிகளில் நாவாந்துறை சென் மேரீஸ் சனசமூக நிலையத்தின் சார்பில் பங்குபற்றி முதலிடம் பெற்ற திருவாளர்கள் செ. முடியப்பு, ப. கபிரியல், செல்வி ப. திலகம், செல்வி ஆ. மொனிக்கம்மா ஆகிய நால்வரையும் நிலையத்தில் நடைபெற்ற பாராட்டுக்கூட்டத்தில் பாராட்டி புலவர் கி. சூசைப்பிள்ளை வாழ்த்துரை கூறினுர். இவர்கள் தமக்குக் கிடைத்த பரிசுகளை நிலைய வளர்ச்சிக்காகநிலையத்திற்கு அன்பளிப்புச் செய்தனர். நிலையத்தலைவர் நீ. எஸ் தாக்கி தலைமைவகித்துப் பேசுகையில் இவர்களின் வெற்றி எமது கிராமத்து மக்கள் அனைவருக்கும் விளையாட்டுத்துறையில் புதியதோர் உற்சாகத்தை அளித்துள்ளதென்றும் பரிசுகளை நிலையத்துக்குக் கொடுக்க முன்வந்தமை இவர்களின் தன்னலமற்ற செயலை எடுத்துக் காட்டுகின்றதெனவும் கூறினுர். நிலையக் காரியதரிசி திரு. சூ. அமிர்தநாதர் நன்றி கூறினுர்.

### வில்வத்தை சம்பவம்

பம்பலப்பிட்டி, சனி

சென்றவருடம் அக்டேபர் மாதத்தில் வில்வத்தையில் இடம்பெற்ற ரயில்விபத்து சம்பந்தமாக ரயில்வே ஜெனரல் மனேஜர் திரு. பி. டி. ரம்பாலா அறிவிக்கையில் விபத்துக்குள்ளான ரயில் வண்டியைச் செலுத்தி வந்த சாரதி மீது நடவடிக்கை எடுக்கப்படுமெனத் தெரிவித்துள்ளார்.

இப்பத்திரிகை ஈழநாடு லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் யாழ்ப்பாணம் சிவன்கோவில் மேலை வீதி [illegible] இலக்கத்திலுள்ள அவர்களது அச்சகத்தில் 1965-ம் ஆண்டு ஏப்ரல் மாதம் 25- கதி அச்சிட்டு வெளியிடப்பட்டுள்ளது.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org